சரஸ்வதி

ஆசிரியர். வ. விஜயபாஸ்கரன்



சரஸ்வதி

ஆசிரியர்: வ. விஜயபாஸ்கரன்

மலர் 2 | மே 1956 | துன்முகி
இதழ் 5 | | சித்திரை

மக்கள் தீர்ப்பு

இலங்கையில் தேர்தல் முடிந்துவிட்டது. ஆளும் கட்சி முறியடிக்கப்பட்டுவிட்டது; புதிய கட்சி பதவி ஏறியிருக்கிறது.

கடந்த ஒன்பது ஆண்டுகளாக நாட்டை ஆண்டு வந்த கொத்தலாவலா இன்று எதிர்க்கட்சித் தலைவராகக்கூட வர முடியவில்லை. தனது ஆட்சிதான் ஆசியாவிலேயே ஸ்திரமான ஆட்சி என்று பெருமைப்பட்டு வந்தார் கொத்தலாவலா. மக்களை மறந்தார்; மக்கள் விரோதப் போக்கில் போனார். மக்கள் சரியான பாடம் கற்பித்துவிட்டனர்.

இலங்கைத் தேர்தல் உலகம் முழுவதும் எதிரொலியைக் கிளப்பியிருக்கிறது. தங்கள் செல்வப் புத்திரனுக்கு ஏற்பட்ட கதியை நினைத்து அமெரிக்கர்கள் அலறித் துடிக்கின்றனர்.

இந்தியப் பிரச்னைக்குத் தீர்வு காணாமல் இந்திய விரோதப் போக்கில் போன ஆட்சி கவிழ்ந்தது குறித்து நாம் மகிழ்கிறோம்; இலங்கை மக்கள் மகிழ்கிறார்கள்.

புதிய ஆட்சியை எதிர்நோக்கியுள்ள பிரச்னைகள் பல. இவைகளுக்கு நியாயமான தீர்வு காண்பார்கள் என்று நம்புகிறோம். ஆட்சியை ஏற்றதும் அவர்கள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் நமது நம்பிக்கையை ஊர்ஜிதம் செய்கிறது.

இலங்கை இந்தியர் பிரச்னை, மொழிப் பிரச்னை இரண்டையும் புதிய ஆட்சி சுமுகமாகத் தீர்க்கவேண்டும். கொத்தலாவலா செய்த தவறுதல்களை புதிய பிரதமர் பண்டாரநாயகாவும் செய்யமாட்டார் என எதிர்பார்க்கிறோம்.

தவறினால், சமாதான முறையிலேயே இலங்கையின் சரித்திரத்தை மாற்றி எழுதிய இலங்கை மக்கள் மீண்டும் செயலாற்றத் தவறமாட்டார்கள் என்பதை ஞாபகப்படுத்துகிறோம்.

புத்தர் அருள் மொழிகள்

இவ்வுலகில் எந்தக் காலத்திலும் பகைமை பகைமையால் தணிவதில்லை; பகைமை அன்பினாலேயே தணியும். இதுவே பண்டை அறநெறி.

* * *

அர்த்தமற்ற பதங்களைத் தொகுத்த ஆயிரம் வாக்கியங்களைக் காட்டிலும் பொருளுள்ள ஒரே சொல் மேலானது; அதைக் கேட்டதும் ஒருவன் மன அமைதி அடைகிறான்.

* * *

அர்த்தமற்ற பதங்களைத் தொகுத்த ஆயிரம் பாடல்களைக் காட்டிலும், பொருளுள்ள ஒரு பாடலின் ஒரு சொல் மேலானது; அதைக் கேட்டதும் ஒருவன் மன அமைதி அடைகிறான்.

* * *

சோம்பலுடன் பலவீனமாக நாலுவருடம் ஒருவன் வாழ்வதைக் காட்டிலும், வீரியத்தோடு முயற்சிசெய்து ஒருநாள் வாழ்வதே மேலானது.

மகான் புத்தரின் 2500-வது ஜன்ம தினம் இம்மாதம் உலகெங்கும் கொண்டாடப்படுகிறது. அவரின் உபதேசங்களை இச்சமயத்தில் ஞாபகப்படுத்திக்கொள்ளுவது மிகவும் பொருத்தமாக இருக்கும். 'தம்மபதம்' என்ற நூலிலிருந்து அவரது மொழிகள் சிலவற்றை எடுத்து வெளியிட்டிருக்கிறோம்.

எவரிடத்தும் கடுஞ்சொல் பேசாதே. அதே முறையில் மற்றவர்களும் பதிலுரைப்பார்கள். கோபமான பேச்சு துக்கமளிப்பதால், பதில் பேச்சு உன்னைத் தாக்கும்.

* * *

மெய்ப் பொருளை உணராமல் ஐயத்தில் உழல்வோனை எதுவும் புனிதமாக்கி விடாது; ஆடையின்றி அலைதல் சடைத்தலை, புழுதியால் (உடல்) மாசடைதல் உபவாசம், வெறுந்தரையில் கிடத்தல், நீறுபூசுதல், அசைவில்லாமல் அமர்ந்திருத்தல் ஆகிய எதுவும் புனிதமாக்கி விடாது.

* * *

கல்வியில்லாதவன் மாடு போல் முதிர்ந்து வளர்கிறான், அவனுடைய ஊண்தான் பெருகுகிறது. ஆனால் அறிவு வளர்வதில்லை.

* * *

நல்லாரைக் காண்பது நன்று; அவரோடு இணங்கியிருப்பது எப்போதும் இன்பம். மூடர்களைப் பாராமலேயிருப்பவன் எப்போதும் இன்பமாயிருப்பான்.

* * *

அதிகமாய்ப் பேசுவதால் மட்டும் ஒருவன் அறிஞனாகிவிட மாட்டான்; வெறுப்பும், அச்சமும் இல்லாமல் உபசாந்தியோடு இருப்பவனே அறிஞன் என்று கருதப்படுவான்.

★ சிறு கதை

ராஜா வருகிருர்

ர. ஆலாலசுந்தரம்

●

அமிஞ்சிகரை பஸ் ஸ்டாப்!

மயக்கும் மாலைப்பொழுது; சூரியனது வெப்பம் தணிந்து விட்டது. மனித வாடை வீச ஆரம்பிக்கிறது. கூட்டினுள் ஒடுங்கிக்கிடந்த பறவைகளும் ஆபீசிலும் வீட்டிலும் அடைந்து கிடந்த மனிதர்களும் வெளியே வரக் கிளம்பிவிட்டார்கள். மனித நடமாட்டம் நிமிஷத்துக்கு நிமிஷம் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. போக்கு வரத்துக்களும் அதிகரிக்கின்றன.

அமிஞ்சிகரை! பெயருக்கேற்ற இடம். அழுகிய பண்டங்களும் குப்பையும் புழுதியும் மலிந்து காணப்படுகின்றன. பச்சையப்பன் கல்லூரிவரை சுத்தமாகவும் ஒழுங்காகவும், மர நிழல்களுக்கு அடியிலும் ஓடி வந்த பூந்தமல்லி நெடுஞ்சாலை, ஹாரிங்டன்ரோடு சந்திக்கும் இடம் தொட்டு பாழடைந்து கிடக்கிறது. பாசி பிடித்துக் கறுத்து, கால வெள்ளத்தால் வெடிப்புகளும் பிளவுகளும் உண்டாகி, பொலிவிழந்து கிடக்கும் வீடுகள் சாலையின் ஓரங்களில் இடத்தை அடைத்துக்கொண்டு நிற்கின்றன. மனித ஜந்துக்கள் நடப்பதற்கென்று இருமருங்கிலும் அமைக்கப்பட்டிருக்கும் குறுகிய பாதை நெடுக மலம், சாணம், எச்சில், சளி—இன்னும் எண்ணி எழுத முடியாத எத்தனையோ! பாதசாரிகள் போனபடியும் வந்தபடியும் இருக்கிருர்கள். க்ஷயம் பிடித்த பிச்சைக்காரன் ஒருவன் 'லொக்கு' 'லொக்கு' என்று இருமிக் காரியுமிழ்கிருன். அவனுக்குப் பக்கத்தில் சற்றுத்தள்ளி சொறி பிடித்த ஒரு பையன் முகத்தைத் துணியிட்டு மூடிக்கொண்டு படுத்துத் தூங்குகின்ருன். இப்படி எத்தனை யெத்தனையோ காட்சிகள்! ஆனுல், எதைப்பற்றியும் கவனிக்காமல், கவலைப்படாமல் மனிதர்கள் நடந்துகொண்டே இருந்தார்கள்.

பஸ் ஸ்டாப்பில் எதிர் எதிராக பஸ்கள் நின்றுகொண்டிருந்தன. அவைகள் புறப்பட்டுப் போகும்பொழுது புழுதியை வாரியிறைத்துவிட்டுச் சென்றன. 'மொப்பூசல்' பஸ்களும், செங்கலும் மண்ணும் ஏற்றிய லாரிகளும் கணக்கில்லாமல் ஓடிக்கொண்டிருந்தன. பஸ்களின் ஹாரன் சப்தமும், லாரிகளின் 'லொட' 'லொட' சப்த

மும் காதுகளைத் துளைத்தன. ஒரே இரைச்சல்! ஒரே தூசி நாசித் துவாரங்களில் காற்றும் புழுதியும் போட்டியிட்டுக் கொண்டு நுழைந்தன. மூச்சு திக்குமுக்காடியது.

'லக்ஷ்மி!' அமிஞ்சிகரை வாசிகளுக்கென்று பிரத்தியேகமாகக் கட்டப்பட்ட ஒரு சினிமாக்கொட்டகை. வெளியே விளம்பரப் பலகைகள் புழுதி படிந்து தொங்கிக்கொண்டிருந்தன. பகல் காட்சி முடிந்து எல்லோரும் வெளியே வந்தார்கள்.

சினிமா பார்த்துவிட்டு மேல் துண்டால் முகத்தைத் துடைத்துக்கொண்டே பக்கத்திலிருந்த "ஜோதி கேப்"பினுள் நுழைந்தார் ஒருவர்.

"அய்யா, சாமி, ஒரு காலணு தர்மம் கொடுங்க புண்ணியாத்மாக்களே!"

அந்த "பாபாத்மாவின்" குரல் ஓட்டலில் நுழைந்தவர் காதில் விழுந்ததோ என்னமோ தெரியவில்லை. அவர் உள்ளே நுழைந்துவிட்டார்.

குஷ்ட நோய் பிடித்த ஒரு கிழ பிச்சைக்காரன்! அவனது கையும் காலும் விரல்களை இழந்து மொட்டையாக இருந்தன. உடல் முழுதும் ரணங்கள். தனது கைகளை விசிறி தனது உடல்மீது மொய்க்கும் ஈக்களை ஓட்டிக்கொண்டே இருந்தான். நடக்கும்பொழுது கால்களைத் தூக்கித் தூக்கி வைத்து நகர்ந்தான். ஓட்டலுக்கு எதிரில் சென்று படிகளின்மீது ஏறி நின்ருன்.

"அய்யா, பிரபுக்களே, மொட்டவன் சாமி. ஒரு காலணு போடுங்க அய்யா, மகராசர்களே......" என்று கெஞ்சிக் கொண்டே தனது விரலற்ற இரண்டு கைகளையும் சேர்த்து ஒரு கும்பிடு போட்டான்.

கல்லாப் பெட்டிக்கு எதிரில் உட்கார்ந்திருந்த ஓட்டல் முதலாளி திரும்பிப் பார்த்தார்.

"டேய், ஒனக்கு எத்தனையோ நாள் சொல்லிப்புட்டேன். இப்பவும் கடைசியா சொல்லிப்புடறேன். இது என்ன ஓட்டலா, தர்ம சத்திரமா? நாலு மனுஷன் வர்ற எடம்டா, தூங்கு மூஞ்சி மடம் இல்லே. வியாபாரத்தைக் கெடுத்துக்கிட்டு இப்படி வந்து எதிருல நின்னே எனக்கு பொல்லாத கோவம் வரும்; மரியாதையா போயிடு; போகலேன்ன ஆமா..."

அதற்குள் சாப்பிட்டு விட்டு வெளியே வரும் ஒருவர் மேசை மேல் காசைத்தட்டினர். ஓட்டல் முதலாளி பேச்சை நிறுத்திக் கொண்டு காசை வாங்கிப் பெட்டிக்குள் போட்டார்.

சாப்பிட்டு வெளியே செல்லும் அந்த மனிதருக்கும் ஒரு கும்பிடு போட்டு ஏமாந்து, மீண்டும் ஓட்டல் முதலாளியையே குறி வைத்தான் அந்தப் பிச்சைக்காரன்.

"அய்யா, எசமான், கண் தெறந்து பாருங்க, துரையே. பெரு நோய்க்காரன் மொதலாளி. ஒரு செல்லாத காலணு இருந்தா போடுங்க அய்யா!"

"டேய் சொன்ன மரியாதையா போவமாட்டே" என்று

தனது கண்களை உருட்டி கிழவனைப் பார்த்து முறைத்தார் ஓட்டல் முதலாளி. அப்பொழுது தான் குளித்துவிட்டு வந்து உச்சியில் விரித்து ஆற விடப்பட்ட குடுமி; கீழே நெற்றியில் பளிச்சென்று மூன்று பட்டைத் திருநீறு; அதற்குக் கீழே கோபத்தால் ஜொலிக்கும் கண்கள்! முப்புரம் எரித்த அதே கண்கள்!

ஆனால், குஷ்டரோகி எரிந்து விடவுமில்லை; சாம்பலாகவும் இல்லை. தலை குனிந்து மீண்டும் ஒரு கும்பிடு போட்டான்!

"கையில்லா மொடவனுக்கு ஒரு காலணா தர்மம் சாமி. கர்ண மகராசன் மாதிரி இருக்கீங்களே ஐயா! ஒரு காசு போடுங்க சாமி; ரொம்ப புண்ணியமுங்க துரையே!"

"டேய், பையா; வெளியே அந்தக் கெழவன் நிக்கிறான் பாரு!' என்று தனது கரகரத்த குரலில் கத்தினார் ஓட்டல் முதலாளி.

பிச்சைக்காரர்களுக்கு வழக்கமாகக் கொடுக்கப்படும் உபசாரம். தட்டு கழுவும் ஒருவன் ஒரு தம்ளர் தண்ணீர் கொண்டுவந்து கிழவன் முகத்தில் 'சளுக்' கென்று விசிறியடித்தான். பிச்சைக்காரனின் தோள்பட்டையிலிருந்து தொங்கிக்கொண்டிருந்த தகரக்குவளை நழுவித் தரையில் விழுந்தது. முடமான தனது புறங்கையினால் முகத்தில் சொட்டும் தண்ணீரைத் துடைத்துக் கொண்டான். குனிந்து குவளையை எடுத்துத் தனது தோள்பட்டையில் மாட்டிக்கொண்டு மீண்டும் கையை நீட்டிக் கெஞ்சினான்.

"கைகால் இல்லாத கெழவன் சாமி; கொழந்தை குட்டிக்காரன் ஐயா; ஒரு காசு போடுங்க சாமி. ஒங்க குழந்தைக்குட்டிக்கு புண்ணியமுங்க பிரபுவே..."

"ஏ கெழவா!..." பின்னாலிருந்து ஒரு கிழவியின் குரல் கேட்டது. அது அவனது மனைவியின் குரல். அவன் திரும்பிக் கூடப்பார்க்காமல் ஓட்டல் முதலாளியிடமே கெஞ்சிக்கொண்டிருந்தான்.

"சே, இவன் என்ன பெரிய எழவாப் போயிட்டான்...இந்தா போய்த் தொலை!" என்று ஒரு காலணாவை எடுத்து வீசி எறிந்தார் ஓட்டல்காரர். அதை எடுத்துத் தனது தகரக் குவளையில் போட்டுக் கொண்டான் பிச்சைக்காரன்.

"என்ன, கெழவா, நான் கூப்பிடறது கேக்கலே? நேத்து ராத்திரி எங்கே தொலைஞ்சு போனே?" என்று அவன் மனைவி கேட்டாள்.

"நேத்து ஒரு வூட்டுல கல்யாண விருந்து."

"அதுக்கு வரச்சொல்லி ஒனக்கு வெத்தலை வெச்சாங்களா?"

கிழவன், மனைவியின் பேச்சு காதில் கேட்காததுபோல பேசிக் கொண்டே போனான்:

"எந்த ஐயரு சமையல் செய்தானோ? அவன் மவராசனா இருக்கணும்!..."

"ஏன் சாப்பாடு ரொம்ப..." கிழவியின் நாக்கில் தண்ணீர் ஊறியது.

"பிரமாதம்! ஒருத்தன்கூட எலையில் வெச்சதை சாப்பிட்டாப்போல தெரியலே. அப்புறம் என்ன? ஐயாபாடு வேட்டைதான்! மூக்கை புடிக்க பாத்துட்டு, அப்படியே "ஹாயா" தூங்கிட்டேன்!"

"உம், மீதிபேரு இருக்காங்க இங்கறதை மறந்துபோயிட்டே இல்லே? சரி இன்னைக்கு எம்மாங் காசி கெடச்சுது? நாலணா இருக்குமா?..."

கிழவனுக்கு இன்னும் சாப்பாட்டின்மேல்தான் எண்ணம் பதிந்திருந்தது,

"அந்த ஐயரு இன்னுங் கொறஞ்சது நூறு வருசமாவது இருக்கணும். ஏழை பாழைங்க உலகத்தில் இருக்கிறவரைக்கும் அந்த மவராசன் உசுரோட இருக்கணும்!"

"ஐயரு சமையலும், எச்சிலை சாப்பாடும் அத்தோட இருக்கட்டும்! ராத்திரியிலிருந்து பெரிய பொண்ணு படுத்த படுக்கையா கெடக்குது; ஒடம்பு அனலா காயுது; கண் தெறந்து பார்க்கலே; ராத்திரிக்காவது ஏதாவது கஞ்சித் தண்ணி வெச்சிக் குடுக்க வேணுமா? இன்னைக்கு நாலணாவாவது கெடச்சிருக்குமா?..."

"நாலணா காசா?... நீ இப்ப போ! நான் இன்னும் ஒரு நாலைஞ்சு பஸ்ஸை பாத்துட்டு கொண்டாரேன்..."

"இப்ப ஒங்கிட்ட தம்பிடிகூட இல்லையா? கெடச்ச காசை எல்லாம் வாங்கித் தின்னுட்டியா? நீ நாசமாப் போக!..." என்று சபித்தாள் அவள்.

"இந்தா இப்ப எங்கிட்ட இருக்கிறது காலணாதான். வேணுமின்னா இதை எடுத்துக்கிட்டுப் போ. இன்னும் ஒரு மணி நேரத்துல வந்துடறேன்..." என்று தன் குவளையிலிருந்த காலணாவை எடுத்து அவளை நோக்கி வீசி எறிந்துவிட்டு நடையைக் கட்டினான்.

அந்தக் காலணா தரையில் விழுந்தது. கிழவி குனிந்து காசை எடுத்தாள். செல்லாத காலணா! வெறுப்போடு காறியுமிழ்ந்து அந்தக் காசை விசிறி எறிந்தாள். அது எங்கே விழுந்ததோ? அவள் கவனிக்கவில்லை. ஆனால் 'டங்' என்ற சப்தம் மட்டும் அவள் காதில் கேட்டது. அவள் போய்விட்டாள்.

கொஞ்சநேரம் கழிந்தது. சூரியன் இப்பொழுது மறைந்து போய்விட்டான். ஆனால் மஞ்சள் வெயில் இன்னும் காய்ந்து கொண்டிருந்தது. கிழவன் கிடைத்த காசுகளை எண்ணினான். மூன்று காலணாக்கள்!

"டேய் கெழவா" என்று ஒரு குரல் இப்பொழுது அவனை அதட்டியது. கிழவன் திரும்பிப் பார்த்தான். ஒரு போலீஸ்காரன். கிழவனது கண்களில் பீதி குடிகொண்டது.

"டேய், பிச்சையா எடுக்கிறே, நட! உம்.." என்று தனது கையிலிருந்த தடியால் கிழவனை

உந்தித் தள்ளினுன் போலீஸ் காரன்.

பக்கத்தில் கன்னங் கரே லென்று ஒரு 'போலிஸ் வேன்' அதற்கு அருகில் ஒரு போலீஸ் அதிகாரி நின்றுகொண்டிருந் தார். தனது கொழு கொழு வென்றிருக்கும் சரீரத்தை ஒரு அணுவளவுகூட அசைக்காமல் அப்படியே நின்றுகொண்டிருந் தார். கடுகடுப்பாக, ஒரு பாட் டில் விளக்கெண்ணெய் சாப் பிட்டமாதிரி இருந்தது அவரது முகம். அ ப் ப டி யே தெருவில் கிடந்து எடுத்து ஒட்ட வைத் தது மாதிரி இருந்தது, அவரது 'ஹிட்லர்' மீசை! 'போலீஸ் காரன்' தள்ளிக்கொண்டு வரும் பிச்சைக்காரன்மீது கண்வைத்த படியே நின்று கொண்டிருந்தார் அவர்.

போலீஸ் வேனுக்கு அருகில் வந்ததும் "உம், ஏறுடா வண்டி யில்!" என்று அதிகாரி பிச்சைக் காரனை நோக்கி உத்தரவிட்டார்.

கிழவனது பயம் அதிகரித்தது. முகம் இருண்டது. ஒன்றும் புரி யாமல் விழித்தான்.

"என்னுங்க, சாமி, விசயம்? நான் ஒரு தப்பும் பண்ணலீங் களே, துரையே..." என்று பீதி யோடு குளறினுன்.

"ஏறுடா வண்டியிலன்னு!" என்று சொல்லிக்கொண்டே அவனது முதுகில் ஒரு அடி கொடுத்தான் பின்னுலிருந்த போலீஸ்காரன்.

கிழவன் அலறி அடித்துக் கொண்டு அதிகாரியின் காலில் விழுந்தான். ஆனுல், 'படபட' வென்று ஏழெட்டு அடிகள் அவன்மேல் விழுந்தன. அடுத்த நிமிஷம் அவன் போலீஸ் வேனுக்குள் போய்விட்டான்.

சரித்திர-புராணப் பிரசித்தி பெற்ற 'கல்கத்தா இருட்டறை' யைப்போல இருந்தது அந்த போலீஸ் வேன். இரும்புக் கம்பி கள் நெருங்கப் பின்னப்பட்டிருந் தன. ஒரு பிச்சைக்காரப் பட்டா ளமே அதனுள் இருந்தது. அழுகையும் முனகலும் வெளியே கேட்டன. ஒரு பெண் ஒப்பாரி வைத்தாள். "நான் ஒரு குத்த மும் பண்ணலையே துரைகளே; புள்ளை குட்டிக்காரனுச்சே, சாமி..." என்று குஷ்டரோகி உள்ளே அழுது கொண்டிருந் தான்.

"ஏய், காட்டுமிராண்டி மாதிரி ஏன் இப்படி கத்தறீங்க?... யாராவது கத்தினு தோலே உரிச் சுப்புடுவேன்!" என்று கர்ச்சித் துக்கொண்டே கம்பி இடுக்கின் வழியாக உள்ளே காரியுமிழ்ந் தான் ஒரு போலீஸ்காரன். 'வேனு'க்குள் இரைச்சல் திடீ ரென்று நின்றது.

"என்ன சார், இதெல்லாம்?... ஏன் இப்படி 'வேனு'க் குள்ளே?..." என்று, இந்தக் காட்சியை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ஒருவர் ஒரு போலீஸ்காரனை மெதுவாகக் கேட்டார்.

அந்த போலீஸ்காரன் தலையை லேசாகத் திருப்பி, அவரை அனுயாசமாக ஒரு தடவை பார்த்துவிட்டு, கொஞ்ச

நேரம் பொறுத்து, சாவகாசமாகப் பதில் சொன்னான்.

"நாளைக்கு அரேபியா தேசத்து ராஜா நம்ம பட்டணத்துக்கு வரார்...!"

கேள்வி கேட்ட மனிதருக்கு இந்தப் பதில் திருப்தியளிக்கவில்லை. சற்றுநேரம் யோசனை செய்து பார்த்தார். ஒன்றும் விளங்கவில்லை. இன்னும் சற்று குரலைத் தாழ்த்தி, "வந்தா என்ன?..." என்று மீண்டுமொரு முறைகேட்டார்.

போலீஸ்காரன் வெறுப்போடு அவர் பக்கம் திரும்பி, அவரை தலைமுதல் கால்வரை ஒரு தடவை முறைத்துப் பார்த்தான்.

"வந்தா என்னவா?... இப்படி தெருவுல எல்லாம் பிச்சைக்காரங்க இருந்தா நம்ம நாட்டைப் பத்தி அவுரு என்ன நெனப்பார்? இது என்ன வெள்ளக்காரன் ராச்சியமா? சுதந்திரம் வந்துடலே?..."

இப்பொழுது அவருக்கு எல்லாம் புரிந்துவிட்டது. அவர் எதையோ மனதுக்குள் அசை போட்டுக்கொண்டே நடந்தார்.



கொண்டை பறிபோன கதை!

டி. கே. சண்முகம்

●

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முந்திய செய்தி! டி. கே. எஸ். நாடகக் குழுவில் நடைபெற்ற சம்பவம். பொள்ளாச்சி நாடக மேடையில் நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்த முதலியார் அவர்கள் எழுதிய காலவரிஷி நாடகம் நடந்து கொண்டிருந்தது.

காலவ முனிவர் ஆற்றின் நடுவே நிஷ்டையில் அமர்ந்திருக்கிருர். அவருக்கு மண்டு, கமண்டு என்னும் இரு சீடர்கள். அவர்களும் கரையருகே கண்களை மூடியவண்ணம் வீற்றிருக்கின்ருர்கள்.

திரை உருண்டுயர்ந்ததும் சித்ரசேனன் என்னும் கந்தர்வன் ஊர்வசி சமேதனுய் உல்லாசத்துடன் விமானத்தில் பறந்து வருகிருன். விமானம் ஆற்றைக் கடந்து செல்லும்போது சித்ரசேனன் தன் வாயிலிருந்த தாம்பூலத்தைக் கீழே உமிழ்கிருன். அது ஆற்றில் கண்களை மூடிக் கைகளை நீட்டி நிஷ்டையிலிருந்த காலவ முனிவரின் வலது கரத்தில் விழுகிறது. கரத்தில் ஏதோ விழுந்து நிஷ்டை கலைக்கப்பட்டதும் காலவர் நாற்புறமும் பார்க்கிருர். சினத்துடன் சிஷ்யர்களை அழைக்கிருர். பிறகு ஞானதிருஷ்டியால் உண்மையறிந்து ஏதோ சபதம் செய்கிருர். இதன் காரணமாக கிருஷ்ணர்ஜுன யுத்தம் நடக்கிறது. இது நாடகக் கதை.

காலவர் நிஷ்டையிலிருக்கும் நிலையில் காட்சி தொடங்கியது. அன்று காலவராக வேடம் புனைந்திருந்தவர் திரு. மாதவ ராவ் என்னும் சிறந்த ஹாஸ்ய நடிகர். சாதாரணமாக வீட்டிலே கூட அவருடைய நடவடிக்கைகள் எங்களுக்குச் சிரிப்பை மூட்டுவதா யிருக்கும். காலவரின் சிஷ்யர்களான மண்டு, கமண்டு வேடங்களில் கலைவாணர் என். எஸ். கே., கே. கே. பெருமாள் இருவரும் நடித்தார்கள். மேலே பறந்து செல்லும் கந்தர்வன் சித்ரசேனனுக நான் நடித்தேன்.

நாடகம் அன்றுதான் முதன் முறையாக நடிக்கப்பெற்றதால் நடிகர்கள் அனைவரும் மிகவும் உணர்ச்சியோடு நடித்தார்கள்.

மேடையின் குறுக்கே கட்டப்பட்டுள்ள கம்பியில் இணைக்கப்பட்டிருந்த ஓர் அட்டை விமானத்தில் நான் ஊர்வசியுடன் பறந்து சென்றேன். ஆற்றில் நடுவே விமானத்தை நிறுத்தித் தாம்பூலத்தையும் உமிழ்ந்தேன்.

சபையில் ஒரே கரகோஷம்! அதைத் தொடர்ந்து பெருஞ்

சிரிப்பு! காட்சியை மக்கள் பிரமாதமாக ரசித்ததாக எண்ணிப் பூரிப்படைந்தேன்.

"அடே மண்டூ, கமண்டூ" என்று ஆவேசத்துடன் கூச்சலிட்டு "என் வலக்கரத்தில் உச்சிஷ்டத்தை உமிழ்ந்தவர் யார்?" என அலறினார் காலவராக வீற்றிருந்த நடிகர் மாதவராவ். மண்டுவும் கமண்டுவும் "ஸ்வாமி" என்று ஓடிவந்ததும் சபையில் மேலும் சிரிப்பொலி அதிகரித்தது.

திரை மறைவில், மேலே விமானத்தில் இருந்த எனக்கு என்ன நடக்கிறதென்பது தெரியவில்லை. தலையை நீட்டிப் பார்த்தேன். சிஷ்யர்களாக நின்ற என். எஸ். கேயும் கே. கே. பெருமாளும் மாதவராவைப் பார்த்து வாயைப் பொத்தியவாறு சிரிப்புத் தாங்காமல் பொருமிக் கொண்டிருந்தார்கள். சிஷ்யர்களின் சிரிப்பைக் கண்ட சபையோர் மேலும் கைதட்டிச் சிரித்தார்கள். மாதவராவ் இருந்த இடம் எனக்குத் தெரியவில்லை. இதற்குள் உள்ளேயும் சிரிப்பொலிகள் கேட்கத் தொடங்கின.

என். எஸ். கே. பேசவேண்டும். அவரோ பேச முடியாமல் "ஸ்வாமீ! தங்கள்...தங்கள்"... என்று தவித்துக்கொண்டிருக்கிறார்.

இந்த நிலையில் "திரை விடுங்கள்! திரை விடுங்கள்!" என்று உள்ளே பல குரல்கள்! திரை விடப்பட்டது. விமானம் கீழே யிறக்கப்பட்ட பிறகுதான் எனக்கு உண்மை விளங்கியது.

விமானம் காலவரைக் கடந்து செல்லும்போது அந்த அட்டை விமானத்தில் நீட்டிக்கொண்டிருந்த ஒரு ஆணி நிஷ்டையிலிருந்த முனிவரின் நீண்ட கொண்டையோடு கூடிய சடைமுடி 'டோப்பா'வையும் பூப்போல எடுத்துக்கொண்டு போய் விட்டது! விமானம் மறைந்ததும் நிஷ்டை கலைந்த காலவர் மொட்டைத் தலையில் உச்சிக் குடுமியோடு சபைக்குக் காட்சியளித்தார். உணர்ச்சியோடு வீற்றிருந்த அவருக்குக் கொண்டை பறிபோனதுகூடத் தெரியவில்லை......இந்த நிலையில் முனிபுங்கவரைப் பார்த்த சிஷ்யர்களால் எப்படி வாய் திறந்து பேசமுடியும்?... ரசிகர்களால்தான் எப்படிச் சிரிப்பை அடக்கமுடியும்?

—'நடிகன் குரல்'



சின்ன இளம்பாவை

"மதுரைப் பாண்டியன்"

(பள்ளுச் சிந்து)

ஆடிஞய் பாடிஞய் சின்ன இளம்பாவை - என்மேல்
அன்பு வைத்து நெஞ்சில் மணந்தாயடி!
கூடி மகிழச் சின்ன இளம்பாவை - என்ன
குறையும் இல்லே; குறிவந்து சொல்லுதடி!

சோணக் குடும்பன் சின்ன இளம்பாவை - உனது
சொந்த மாமனே வேண்டா மென்ருயே!
ஆணையு மிட்டுச் சின்ன இளம்பாவை - என்னே
ஆளாக்கி நீயும் அன்பு வசமாஞய்.

வளர்த்த ஆடுபோல் சின்ன இளம்பாவை - நீயும்
வற்ருத அன்புடன் என்னே டிருப்பாயடி!
உளத்தில் பொங்குது சின்ன இளம்பாவை - காதல்
ஊறிச் சுவைதருந் தேனே உண்பேனடி!

பண்ணே யாண்டைதான் சின்ன இளம்பாவை - என்னேப்
படுத்தி வைத்த பாடுபல உண்டடி!
பெண்ணே மணக்குமுன் சின்னஇளம்பாவை - அவன்
பெரிய தனமாய்ப் பேசிய துண்டடி!

குளம்வெட்டுக் கூலி சின்னஇளம்பாவை - எனக்குக்
கொடுக்க மறுத்தான் பண்ணே யாண்டையடி!
உளங் கட்டுப்படச் சின்னஇளம்பாவை - துளியும்
ஒப்பிட வில்லே; உறுதி கொண்டேனடி!

குடும்பன் வீட்டில் சின்னஇளம்பாவை - பெண்ணேக்
கொள்வது பாவம் என்ருன் ஆண்டையடி!

இடும்பை யல்லவோ சின்னஇளம்பாவை - இந்த
இழவு பிடித்த சாதி முறையெல்லாம்!

தோட்டக் கன்றுபோல் சின்னஇளம்பாவை - அழகு
தோன்றும் உனது வடிவம் ஆகுமடி!
பாட்டுச் சந்தம்போல் சின்னஇளம்பாவை - உனது
பழகு செழுமைக் குரலே கேட்குமடி!

வாழைக் குருத்துச் சின்னஇளம்பாவை - வீட்டில்
வளமுற நீரை வார்த்துக் கொட்டடி!
தாழை மடல்போல் சின்ன இளம்பாவை - உனது
தங்க நிறக்கையால் வீடு மெழுகடி!

புதுமணல் பரப்பிச் சின்னஇளம்பாவை - அங்கே
பொலிவை இழந்த பழைய மணலையே
மெதுவாய் அகற்றிச் சின்னஇளம்பாவை - மேன்மேல்
வீட்டினில் வாழ்க்கை விளங்கிடச் செய்யடி!

வேட்டைக் காரரே சின்னஇளம்பாவை - பெண்ணை
விலையாகப் பேசி வீட்டிலே பூட்டுவார்!
நாட்டைத் திருத்தச் சின்னஇளம்பாவை - இதுபோல்
நாகரிகந்தான் ஏதுக்கு? வேண்டாமடி!

பண்ணை யடிமைகள் சின்னஇளம்பாவை - அந்தப்
பள்ளர் சேரியின் மக்களைக் காண்பாயடி!
பண்ணை யாண்டையாய்ச் சின்னஇளம்பாவை - ஒருவன்
பலரை அடிமைப் படுத்தவும் வேண்டுமோ?

திருத்திப் பயிரிட்டுச் சின்னஇளம்பாவை - இனிச்
செவ்வை யானதோர் விளைச்சலைக் காண்போம்!
ஒருத்தி நீயே சின்ன இளம்பாவை - எனது
உளத்தில் எழுதிய ஒவியப் பாவையடி!

பாவை சொன்ன பதில்

(பள்ளுச் சிந்து)

தென்னந் தோப்பிலே முன்ன மொருநாளில்
உன்னைக் கண்டேனே!
தெள்ளு மணலை அள்ளிக் கொண்டுநான்
வேலைசெய் திருக்கையில்
என்னைப் புதுமையாய் ஏறெடுத் துநோக்கி
மின்னைப்போல் மறைந்தாய்!
எதற்கோ யரென எண்ணி மனத்துள்
பதைத்தவள் ஆனேன்.

பண்ணை ஆண்டைக்கு நெல்லை அளக்க
அன்றொரு நாள்வந்தேன்;
பார்த்த பழைய முகத்தை எதிரில்
பக்கமாய்ப் பார்த்தேன்!
பெண்ணும் இவள்யார் என்றுதான் நீயும்
எண்ணியே போலும்
பெரிய மனசுடன் பிரிவு நிறைந்த
கண்களைக் காட்டினாய்!

அப்போ துமுதல் தப்பாமல் நீயும்
ஆயிரம் முறையென்னை
ஆடித் திரியவும் பாடி நிற்கவும்
பார்த்து மகிழ்ந்தாய்!
மப்பு மந்தார வானில் ஒளிபோல்
மருவிடத் துடித்தேன்!
மாய மானதோர் நேயம் வளர்ந்து
மனசு குளிர்ந்ததே!

வீட்டில் தந்தையும் தாயும் என்னை
விதவிதப் பொருளில்
மெத்தன மாகப் பேசினர்; பண்ணையில்
அத்தனை பேர்களும்
காட்டி ஏளனம் செய்தார்; நானும்
காதல் பெரிதெனக்
கண்ணின் ஒளிபோல் மின்னிப் பொலியும்
உன்னை அடைந்தேனே!

நம்மைப் பிரிக்க இம்மையில் ஆகா
தென்றது தெரிந்து
நம்மவர் யாவரும் ஒன்ருகி நமக்கு
வாழ்த்து நல்கினர்;
அம்மையும் அப்பனும் நம்மை வாழ்த்தி
அரிசி பருப்பும்
ஆடும் வளர்க்க நாடிக் கொடுத்தார்;
அன்பு தழைத்ததே!

ஆனலும் பண்ணை யாண்டை ஒருவனே
நாஞ விதமாக
அடிமை முறையினல் கொடுமை செய்கிருன்;
நொடியில் அதனைத்
தாஞக மடியச் செய்குவோம்; இனிமேல்
தாங்க முடியாது!
சரிநிகர் தர்மம்! ஒருநிகர் சமூகம்!
என்பதைக் காண்போம்.

குட்டிக்கதைகள்

நோயுற்ற பருந்து

ஒரு பருந்து வெகு காலமாக நோயுற்றிருந்தது. "அம்மா, பக்கத்திலுள்ள கோவில்களுக்கெல்லாம் போ. என் நோய் குணமாகும்படி பிரார்த்தனை செய்து நேர்த்திக் கடன் பண்ணு" என்று ஒருநாள் அது தன் தாயிடம் சொன்னது.

இதைக் கேட்ட தாய்,

"நமது இனத்தார் திருடாத கோவில் ஒன்றுமேயில்லையே, பாப்பா. திருடிவிட்டு அங்கே போய் நேர்த்திக் கடன் செய்தால் தெய்வந்தான் நம்புமா?" என்று பதிலளித்தது.

★

தோற்றத்தால் பயன்?

ஒரு மயில் தன் அழகான தோகையை விரித்து, ஒரு நாரையின் முன் ஆடியது. "பார், நான் எவ்வளவு அழகாக இருக்கிறேன்; ராஜாக்கள் கூடப் பொருமைப் படுவார்கள். நீயும் இருக்கிருயே! உன் ஆடையைப் பார். ஆண்டிகளும் விரும்ப மாட்டார்கள்" என்று நாரையை மயில் கிண்டல் செய்தது.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த நாரை, "நிறுத்து, நிறுத்து, பூமியிலே அழுக்கிலே கிடந்து புரண்டு, சிறுவர்களால் வேடிக்கை பார்க்கப்படுவது மேலா அல்லது மேகங்களுக்கு மேல் ஆனந்தமாய்ப் பறந்து செல்லுவது மேலா" என்று கேட்டது.

★

எதிரிக்கும் அதே கதி

ஒரு சுரு மீன் தன்னை விழுங்க வருவதைப் பார்த்த சிறுமீன் கரையைப் பார்த்து நீந்தியது. கரையை நெருங்கியதும் ஒரு பெரிய அலை அதைக் கரைமீது வெகு தூரத்தில் தூக்கி வீசியது. சுரு மீனும் சிறு மீனுக்குப் பின்னலேயே வந்து கொண்டிருந்தபடியால் அந்த அலையில் அகப்பட்டு அதுவும் கரையில் போய் விழுந்தது. அதைப் பார்த்த சிறுமீன், "என்னுடைய எதிரிக்கும் எனக்கும் ஏற்பட்ட கதியே ஏற்பட்டிருப்பதால் நான் சந்தோசமாக உயிரை விடுகிறேன்" என்று சொல்லி மகிழ்ச்சி அடைந்தது.

★

சொல்லும் செயலும்

ஒரு நரி வேடனுக்குப் பயந்து ஓடியது. வழியில் ஒரு விறகு வெட்டியைப் பார்த்தது. தனக்கு ஒளிவதற்கு இடம் பார்த்துக் கொடுக்கும்படி அவனைப் பிரார்த்தித்தது. பக்கத்

ஈசப்

திலிருந்த தன் குடிசையைக் காட்டி அதில் போய் ஒளிந்து கொள்ளும்படி விறகு வெட்டி சொன்னான். நரி ஒளிந்து கொண்டது. பிறகு அங்கே வேடன் வந்தான். "ஒரு நரி இந்தப் பக்கம் வந்ததே, பார்த்தாயா?" என்று கேட்டான். 'இல்லை' என்று விறகுவெட்டி வாயினால் சொல்லிவிட்டுக் கையினால் தன் குடிசையைக் காட்டினான். அவன் கை சாடை காட்டியதைக் கவனியாத வேடன் அதைவிட்டுப் போய் விட்டான். அப்புறம் நரி குடிசையை விட்டு வெளியே வந்து தன் வழியே புறப்பட்டது. அதைப் பார்த்த விறகுவெட்டி "உனக்கு மரியாதை என்பது கொஞ்சம்கூடக் கிடையாதா? நன்றி கூறாமல் போகிறாயே!" என்று கேட்டான்.

இதைக் கேட்ட நரி சொன்னது: "உனது பேச்சைப் போலவே செய்கையும் யோக்கியமானதாக இருந்திருந்தால் கட்டாயம் உனக்கு நன்றி சொல்லியிருப்பேன்"

புத்தியற்ற சிநேகிதர்

ஒரு கலைமானுக்கு வயோதிகத்தால் கால்கள் நடக்க முடியாமல் போயின. ஆயுளில் மீதம் உள்ள நாட்களைக் கழிப்பதற்காகக் கஷ்டப்பட்டுத் தீனியைச் சேர்த்தது. நிம்மதியாகப் படுத்துக்கொண்டே காலத்தைக் கழிக்க முயற்சித்தது.

ஆனால் அந்தக் கலைமான் நல்ல குணமுடையதாக இருந்தபடியால் ஏராளமான நண்பர்கள் இருந்தனர். எழுந்து நடமாட முடியாத நிலைமையில் இருப்பதைக் கேள்விப்பட்டதும் அவை கலைமானைப் பார்ப்பதற்கு ஏராளமாய் வந்து போயின. வருகிறவை பேசுவதும் பேச்சுவாக்கில் தீனியைத் தின்பதுமாய் இருந்தன. இதனால் வெகு சீக்கிரத்தில் கலைமான் சேர்த்து வைத்திருந்த தீனி முழுமையும் தீர்ந்துபோயிற்று. கடைசியில் கலைமான் தீனியில்லாததால் மாண்டது.



வெயில் காயாதா......?

★

சா. நாகலிங்கன்

★

பெற்றதாய் தன்னைப் பிறந்தபொன் னூட்டினிலே
சற்றே ஒதுக்கிவைக்கும் தன்மையைநீர் எங்கேனும்
கண்டதுண்டோ சொல்வீர் கனிவு உளத்தீரே!
விண்டதுண்டோ யாரேனும் விரிந்த உலகிதனில்?
இளமையிலே அவள்மார்பில் இருந்து அமிழ்துண்டு
மழலை மொழிபேசி மடியில் புரண்டுருண்டு
மலர்க்குவியல் தேனிஃது வண்ண மணிக்குவியல்
நலஞ்சேர்க்கும் நல்லமுது நான்பெற்ற செல்வமுது
நான்வாழ வந்த நன்மைத் திரளுருவே
மானே மரகதமே என்றெல்லாம் வாய்பேசி
கன்னத்தில் முத்தமிட்டு கனிவாய்உச் சிமோந்து
வளர்த்தாள்நம் அன்னை வளர்ந்தோம்நாம் யார்மறுப்பார்?
இத்தோடு போச்சா எதிர்காலம் வாழ்வதற்கு
கொத்தாத வேலையெல்லாம் கொத்திப் படிக்கவைத்தாள்.
நீவளர்ந்தால் நான்வளர்வேன் நின்னன்மை என்னன்மை!
மாநிலத்தில் நின்னுயர்வு நான்பெற்ற நல்லுயர்வு

ஒன்றுரைத்து நமைக்காத்த ஈன்றெடுத்த அன்னைதனை
குன்றியுளம் நோகிக் குலைநடுங்கச் செய்வதுவா?
அறிவுவந்து விட்டதெனக் காண்மைவந்து விட்டதினிச்
செறிவுத்தாய் வேண்டாமெனச் செப்பியதை நீரெங்கு
கேட்டீர்கள் அய்யா! கிளருங்கள் தமிழ்நாட்டில்
மட்டும்தான் இவ்வொலி மணியாகத் தானொலிக்கும்.
நம்தாயின் பேரழைக்க நாக்கூசி வெந்திட்டால்
அம்மா இவரோ அவனிதனில் வாழுவது?
தமிழ்நாடு என்றசொலால் தாயின்பேர் சொல்லாமல்
உமிழுவதும் எதற்காக உரைப்பதுவும் ஏன்சென்னை?
தாயின்பேர் வைக்காமல் தரணிதனை ஆள்கின்றார்
காயும் வெயிலிவரைக் காயாதோ? மாற்றாதோ?

சுரஸ்வதி

இதற்குப் பெயர் வாழ்க்கையா?

வ. ரா.

இதற்கு முன் ஜன்மம் இருந்ததா, இதற்குப்பின் பிறப்பு இருக்குமா என்பது தெரியாது. சாஸ்திரம் என்ற ஏட்டிலே, ஏதோ எழுதி வைத்திருக்கிறதைத் தவிர, பூர்வ ஜன்ம, புனர் ஜன்ம தத்துவத்துக்கு ருசுவும் கிடையாது. மறு பிறப்பைக் கற்பனையின் மூலமாகத்தான் காண முடியும். இந்தப் பிறப்பையோ, கண்ணாலே பார்க்க முடியும். ஆகவே, கற்பனையை நம்பி, கண்ணால் பார்க்கக் கூடியதை அலட்சியம் செய்வது அறியாமை யாகும்.

ஆனால், நம்மவர்கள் இந்தப் பிறப்பை மதிப்பது மில்லை, கவனிப்பது மில்லை. "ஏதோ பாபத்தால் இந்த மண்ணில் பிறந்தோம். இதைவிட்டு எப்பொழுது போவோமோ? மண்ணில் இன்பம் என்பது பாசமாகும். நிலையற்றது வாழ்வு. நிலையற்ற ஒன்றைப் பற்றி எதற்காகக் கவனம் செலுத்தவேண்டும்? நிலையுள்ளதைத் தேடி அடையவேண்டும். இந்த மாயப் பிரபஞ்ச வாழ்க்கையை விரைவில் உதறிவிட வேண்டும்" என்ற எண்ணமும், உணர்ச்சியும்தான் நம்மவர்களை இரண்டாயிர வருஷ காலமாகப் பற்றிக்கொண்டு வந்திருக்கிறது.

இந்த மனப்பான்மையின் விளைவுகள் என்ன? நாம் வாசம் செய்யும் பூமி நம்முடையது என்பதையும், அதைக் காத்துப் பண்படுத்த வேண்டிய பொறுப்பு நம்முடையது என்பதையும் நம்மவர்கள் ஏற்றுக் கொள்ளவே இல்லை. ஆகவே, நமது நாட்டின் பேரில் அன்னியர்களின் படையெடுப்பு, அலை மோதுவதைப்போல், விடாமல் நேர்ந்து கொண்டே வந்திருக்கிறது. போர்க் களத்தில், எதிரிகளால் தோற்கடிக்கப் படுவதும், சில ஆயிரம் உயிர்கள் போவதும் கூடப் பெரிய காரியமல்ல. வெற்றி பெற்ற அன்னியர்கள், நமது நாட்டிலேயே நிலைத்து, அரசு செலுத்தத் தொடங்கிவிட்டால், அப்பொழுதுதான் உண்மையான சனியன் பிடித்துக் கொண்டது என்று சொல்லலாம். அதிகாரமும் கஜானாவும் ஆளுபவர்களின் கையில் இருப்பதால், அவர்கள் நயபயத்தினால் நம்மவர்களின் வாழ்க்கையை வெகுவிரைவில் சின்னாபின்னப் படுத்தி விடுகிறார்கள்.

வேடிக்கை என்ன வென்றால்,

நம்மவர்களின் வாழ்க்கை பார்வைக்கு மாறவில்லை போலத் தோன்றும். ஆனால், எல்லா வகைகளிலும் நம்மவர்கள் அடிமைகளாகவும், பலவீனர்களாகவும் ஆகி வருவதைத் தெளிவாகக் காணலாம்.

அடுத்து அடுத்து அன்னியர்களின் படையெடுப்பும் அவர்களது ஆட்சியும் ஏற்படுமாகில், அவைகளின் தீய பலன்களைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? அன்னியர்களின் பழக்க வழக்கங்கள், ருசி, பேச்சு முதலியன, எப்படியோ, சூட்சுமமாக நமது வாழ்க்கையில் புகுந்து கொள்ளும். ஜனசமூகம் பல துண்டுகளாகப் பிளந்துபோகும்.

நாங்கள் எல்லாரும் இந்த நாட்டில் பிறந்து வாழ்பவர்கள், ஆகவே சகோதரர்கள் என்பதை மறந்து, எல்லோருக்கும் மூதாதைகள் ஒரே கூட்டத்தார் என்பதையும் அடியோடு மறந்து, தங்களைப் பரஸ்பர விரோதிகளாக எண்ணிக்கொள்ளுகிறார்கள். இன்றைக்கு ஜின்னா அவர்கள் பாகிஸ்தான் கேட்கிறாரே, அது அன்னியர் ஆட்சியின் விளைவுதானே? இந்தியாவிலிருக்கும் பெரும்பான்மை முஸ்லிம்கள் ஹிந்து மூதாதைகளின் சந்ததிகள். அப்படி இருந்தும் முஸ்லிம்கள் தனி இனம் என்று சொல்லி, பிறரை அதட்டும் நிலை வந்துவிட்டது.

ஆங்கிலேயர்கள் சிறு கூட்டத்தார். அவர்கள் பெரிய தேசமாகிய இந்தியாவை ஆளவேண்டும். தங்களுக்குச் சாதகமாக, ஒரு கூட்டத்தைச் செய்து கொள்ளவேண்டும். அந்தப் பிரித்தாளும் யுக்தியின் விளைவு தான் பாகிஸ்தான் பூதம்.

நாகரிகப் பண்பிலும், இயற்கைத் தேவைகளிலும், ருசிகளிலும் ஹிந்துக்களிலிருந்து முஸ்லிம்கள் எப்படி மாறுபட்டவர்கள் என்பது தெரியவில்லை. சந்திரலோகத்திலிருந்து தனிப் பிறவிகளாகத் தோன்றியது மாதிரி, முஸ்லிம்கள் பேசுவது யாருக்காவது விளங்குமா?

பாகிஸ்தான் பூதம் தோன்றினது எதனாலே? ஆங்கிலேயர்கள் இதற்கு ஓரளவு பொறுப்பாளிகளாக இருந்தாலும், மேடைப் பிரசங்கிகள் வாய் கிழியப் புகழுகிறார்களே நமது முன்னோர்களைப் பற்றி, அந்த முன்னோர்கள்தான் இதற்குப் பரிபூரண ஜவாப்தாரிகள். தாங்கள் வாழும் மண்ணை, அன்னியர்கள் அடி வைக்காமல் காக்கவேண்டும் என்ற உணர்ச்சியையும் அறிவையும் முன்னோர்கள் இழந்துவிட்டதால், நம்மவர்கள் இப்பொழுது பஞ்சு படும் பாடு படவேண்டியிருக்கிறது.

அரசியலில்தான் அடிமைகளானோம் என்றால், கலை அபிவிருத்திதான் ஏதேனுமுண்டா? சென்ற ஆயிரம் ஆண்டுகளாக, கலைகள் எவ்வித அபிவிருத்தியும் அடையாமல் தேக்கமுற்றுக் கிடக்கின்றன. இலக்கியமும் அவ்வாறே. காடியாகப் புளித்துப்போன உணவு, விஷமாக

மாறும் என்பதை அறியாவிட்டால், என்ன செய்வது? உலகமெல்லாம் உற்சாகமும் உயிரும் ததும்பி முன்னேறும் பொழுது, அவை இரண்டு மில்லாமல் தேக்கமுற்றுக் கிடக்கும் ஜன சமுதாயம் நசுக்குண்டு போகும் என்பதை அறியாவிட்டால், என்ன செய்வது ?

இந்த மாதிரி, திக்கற்ற நிலைமையை வரவழைத்துக்கொண்ட பின், "திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை" என்று புலம்புவதைத் தவிர, வேறு என்ன இருக்க முடியும் ?

திக்கற்ற நிலைமை ஏன் உண்டாக வேண்டும்? இதைப் பற்றி, யாரும் யோசிப்பதே இல்லை. இப்பொழுதுகூட, அதை ஆராய மறுக்கிறார்கள், முஸ்லிம் ஆட்சி, ஆங்கில ஆட்சி முதலியன ஏன் நேர வேண்டும் என்று கேட்டால், அவை இந்த நாட்டின் சரித்திரப் போக்கில் நேர்ந்த (எதிர்பாராத) விபத்துக்கள் என்கிறார்கள். இவர்கள் சொல்லும் சமாதானம் உங்களுக்குப் புரிகிறதா அல்லது திருப்தி அளிக்கிறதா என்று நான் உங்களைக் கேட்கிறேன்.

எதிர்பாராத விபத்துக்கள் ஆனபடியால், அவைகளைப் போக்குவதற்கும் அவைகளால் ஏற்பட்ட தீய பயன்களை அழிப்பதற்கும், பலவீனங் கொண்ட, பதர்களைப் போன்ற மனிதர்களால் என்ன ஆகும் என்று சட்ட வட்டமாகப் பேசுகிறார்கள். இவ்வாறு பேசுவதோடு, அவர்கள் நின்றுவிடுவதில்லை. "ஆண்டவன் பூமியில் அவதாரம் செய்வான்; அப்பொழுது எல்லாம் சரியாகப் போய்விடும்" என்று பக்தி நிறைந்த ஞானவான்களைப் போல, விஷயத்தை முடித்து விடுகிறார்கள். இது போலித் தத்துவம் என்று அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இப்படிப் போலித் தத்துவம் பேசி, தங்கள் பொறுப்பைக் கழித்துக் கொள்ளப் பார்க்கிறார்கள் என்று சொல்லவும் வேண்டுமா ?

தன்னம்பிக்கை, சலிப்பில்லாத முயற்சி, சமூகத் தொண்டு போன்றவைகள் மறைந்து போனால், ஜனசமுதாயம் சருக்கி விழும் என்பது குழந்தைகளுக்குக்கூடத் தெரிந்த விஷயம். சருக்கி மட்டும்தான் விழுமா? நாம் மேலே பார்த்தபடி, அன்னியர்களுக்கு ஆட்பட்டுக் கிடப்பதுதான் நாம் ஜன்மம் எடுத்ததின் பயனாக முடியும்.

வாழ்க்கையிலே சக்தி ஊடுருவிப் பாயாவிட்டால், அந்த வாழ்க்கை தேய்ந்து மாய்ந்து போகும். அந்த வாழ்க்கையின் முடிவு என்ன? அடிமையாக இருப்பதுதான். எந்த இடத்தில் நாம் வாழுகிறோமோ, அந்த இடத்தைப் பத்திரமாக வைத்துக் கொள்ளுவதும், அதைக் காப்பதும் நமது கடமை யல்லவா? இடத்துக்குப் பாத்தியம் வேறு ஒருவனுடைய கைக்குப் போகுமாகில், ஒன்று நாம் அந்த இடத்தில் குடியிருக்க முடியாது. அல்லது, குடியிருக்க

மூடிந்தால், பாத்தியக்காரன் விதிக்கும் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு வாழ வேண்டும். அதாவது, நாம் "அவனுடைய வாழ்க்கை"யைத்தான் வாழமுடியும். நமது சொந்த வாழ்க்கையை வாழவே முடியாது.

இந்த ரகசியத்தை நமது முன்னோர்கள் ஏன் அறியவில்லை? அவர்கள் அறிந்து கொள்ளாதது மல்லாமல், தங்கள் சொந்த வாழ்க்கையை (அன்னியர்களின் ஆட்சியின் கீழும்) வாழ்ந்து வந்ததாக, தங்களையே ஏமாற்றிக் கொண்டு வந்தார்களே, அதை நினைத்தால்தான் மனத்துக்கு நிரம்ப வேதனையாக இருக்கிறது.

—'சக்தி'

சரஸ்வதி

ஒவ்வொரு ஆங்கில மாதமும்
முதல் தேதியன்று வெளிவருகிறது

சந்தா விவரம்

தனிப்பிரதி 2 அணு
ஆண்டு சந்தா ரூ. 1-8-0.

தனிப்பிரதி வேண்டுவோர் மூன்றணு ஸ்டாம்பு அனுப்பிவைக்கவும்.

நிர்வாகி

சரஸ்வதி

1, ராஜா அண்ணுமலை செட்டியார் ரோடு,
வேப்பேரி :: சென்னை-7.

இந்தியாவைக் கண்டேன்!

இலியா எரன்பர்க்

இந்தியாவைப்பற்றி, அதன் கலாச்சாரம்பற்றி நமக்கு இன்னமும் அதிகம் தெரியாது என்றுதான் சொல்ல வேண்டும். ஆனல் சமீபத்தில், அந்த நாட்டின் கலாச்சாரத்தைக் கூடுதலான அளவுக்கு அன்யோன்யமாகப் பரிச்சயம் செய்துகொள்வதற்கு, நாம் பெரிதும் முயற்சித்து வந்துள்ளோம் என்பதும் உண்மையே. மாஸ்கோவில் பல இளைஞர்கள் இந்தி மொழியையும் இதர பல இந்திய மொழிகளையும் பயின்று வருகின்றனர். மென்மேலும் அதிகமாக இந்தியப் புத்தகங்களும் நூல்களும் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன. இந்திய ஓவியக் கண்காட்சி நம் நாட்டின் கலா ரசிகர்கள் அனைவரின் உள்ளத்தையும் ஆட்கொண்டு விட்டது. இதேபோல் சமீபத்தில் நடைபெற்ற இந்தியக் கைத்தொழில் கலைப் பொருட்களின் கண்காட்சி இங்கு பெரிதும் பாராட்டப்பட்டு அமோக வெற்றி பெற்றது; மேலும் இந்தியத் திரைப் படங்கள் நமது நாட்டின் நகரங்கள் யாவற்றிலும் காட்டப்பட்டுள்ளன. இவை யாவும் ஆரம்ப நடவடிக்கைகளே. சோவியத் யூனியனையும் அதன் கலாச்சாரத்தையும் நன்கு புரிந்துகொள்வதற்கு இந்தியாவில் பெருமுயற்சி செய்யப்பட்டு வருவதை நான் நேரில் கண்டேன். எழில்மிகு அற்புதங்களின் இருப்பிடமான இந்தியா என்றென்றும் அதே கவர்ச்சியுடன் விளங்கும் என்றாலும், அதன் எழில் சோவியத் மக்களுக்கு எட்டாத பொருளாகி விடக் கூடாது; அற்புதங்களின் இருப்பிடமான அந்நாடு சோவியத் மக்கள் அறியாத அற்புதங்களின் இருப்பிடமாக இருக்கக் கூடாது. இத்தகைய நிலை ஏற்பட எங்களால் ஆனது அனைத்தையும் செய்வோம் என்று நான் நமது இந்திய நண்பர்களுக்கு மனப்பூர்வமாக வாக்குறுதி அளிக்கிறேன்.

பிரபல சோவியத் எழுத்தாளர் இலியா எரன்பர்க் சமீபத்தில் இந்தியாவுக்கு வந்திருந்தார். இந்திய நாட்டைப்பற்றியும், மக்களைப் பற்றியும் அவர் எழுதியுள்ள கட்டுரையின் சுருக்கத்தை இங்கே வெளியிட்டிருக்கிறோம்

நெடுங்காலத்திற்கு முன்பே உலகிற்கு இந்தியா ஆற்றிய சேவையை எல்லோரும் அறிவர். உலகிலுள்ள சகல நாடுகளிலுமுள்ளவர்கள் இப்பொழுது சமஸ்கிரதம் படித்து வரு

கின்றனர் என்ருல் அது வெறும் பொழுது போக்குக்காக அல்ல; இந்தியாவின் அரும் பெரும் நூல்களைப் படித்தறிந்து கொள்வதற்கேயாகும். ஆனுல் கடந்த காலத்தைப் போற்றி மகிழும் ரசிகர்கள் பஞ்சசீலத்தின் பிரமாத முக்கியத்துவத்தை மறந்து விடக் கூடாது. இந்த ஐம் பெரும் கோட்பாடுகள் மனித குலம் முழுமைக்கும் நம்பிக்கையூட்டும் மூலாதாரமாக விளங்குகின்றன. பெரும்பாலும் என்னைப் போன்றுள்ள முதுமைப் பருவத்தினர், எதிர்காலத்தில் நம்பிக்கையிழந்து உளச்சோர்வு கொள்வதுண்டு. ஆனுல், உரமான உள்ளம் எனக்கு உண்டு- எதிர்காலத்தில் நம்பிக்கை மிகுந்தவன் நான். பஞ்சசீலக் கோட்பாடுகளை ஏனைய நாடுகளும் ஏற்றுக்கொள்ளும் நாள் வரத்தான் போகிறது என்பதைப்பற்றி எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை. மேலைய முகாமைச் சேர்ந்த அரசாங்கத் தலைவர்கள் இந்தியாவிற்கு விஜயம் செய்ய இருக்கிருர்கள். அவர்களின் விஜயத்தின்போது, பகைமையையும் பயமுறுத்தல்களையும் அடிப்படையாகக் கொண்ட கொள்கைகளைவிட சமாதான சகவாழ்வும் ஒத்துழைப்பும் சாலச்சிறந்தவை என்பதை இந்தியாவின் யதார்த்த வாழ்க்கையும் சூழ்நிலையும் மேலைய நாடுகளுக்கு அறிவுறுத்தும் என்றும் இதனுல் மேலைய வல்லரசுகள் பஞ்சசீலத்தை அங்கீகரிப்பதற்குச் சாதகமான நிலை ஏற்படும் என்றும் நான் எதிர்பார்க்கிறேன்.

எல்லா நாட்டு மக்களும் நிம்மதியாக வாழவேண்டும் என்பதற்காக சோவியத் நாடு பெரும் பணி ஆற்றியுள்ளது. நமது மக்கள் இந்திய மக்களுடன் மேலும் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கவேண்டியது சமாதான இலட்சியத்திற்கு மெத்த அவசியம் என்ருல், அது மிகையாகாது. நான் சென்ற ஒவ்வொரு நகரிலும் சோவியத் தலைவர்களின் விஜயம் பற்றி, அவர்களின் விஜயத்தின் பலனுய் இந்திய மக்களின் உள்ளத்திலே அழிக்க முடியாது குடிகொண்டு விட்ட அந்த அற்புத நினைவுகள் பற்றி என்னிடம் கூறப்பட்டது. நமது இரு மக்களுக்கு இடையிலுள்ள ஒத்துழைப்பு, நண்பர்களுக்கு இடையிலுள்ள ஒத்துழைப்பு. இந்தியாவில் பணியாற்றிவரும் சோவியத் என்ஜினியர்களையும், பூகர்ப்ப விஞ்ஞானிகளையும், டாக்டர்களையும் நான் சந்தித்தேன். இந்திய சர்க்கார் கொடுத்துள்ள வேலைகளை அவர்கள் பெரும் ஆர்வமுடனும் பொறுப்புடனும் நிறைவேற்றிவருவதை நான் நேரடியாகக் கண்டேன். பொருளாதார ரீதியிலும் அரசியல் ரீதியிலும் சுயேச்சையான ஒரு நாட்டை நிர்மாணிக்கும் மகத்தான பணியில் ஈடுபட்டுள்ள இந்திய மக்களுக்கு நமது சோவியத் ஊழியர்களின் முயற்சிகள் உதவிகரமாக இருக்கும் என்று நான் திடமாக நம்புகிறேன்.

இந்திய – சோவியத் கலாச்சாரக் கழகத்தின் அழைப்பின் பேரில், நான் இந்தியாவிற்கு விஜயம் செய்ய நேர்ந்தது. என்னை அன்புடன் வரவேற்று உபசரித்த அருமை நண்பர்கள் தமது நாட்டை நன்கு தெரிந்து கொள்வதற்கு எனக்குப் பேருதவி புரிந்தனர். டில்லி, ஆக்ரா, கல்கத்தா, சென்னை, புதுச்சேரி, பம்பாய், அவுரங்காபாத் இங்கெல்லாம் சென்றேன் நான். புகழ்மிகு அஜாந்தா, எல்லோரா கோயில்களை தரிசித்தேன் நான். கலாச்சாரத்தை "மேற்கத்திய கலாச்சாரம்" என்றும் "கிழக்கத்திய கலாச்சாரம்" என்றும் முறைகெட்ட ரீதியில் பாகுபடுத்துவது முற்றிலும் அபத்தமாகும் என்பதை நான் மீண்டும் பார்க்க முடிந்தது. எனது இக்கருத்து ஐயந்திரிபற மீண்டும் ஊர்ஜிதமாயிற்று என்றுதான் சொல்வேன். இந்தியாவும், கிரேக்க நாடும், சீனாவும்தான் நமது நாகரீகத்தின் பிறப்பிடம், இந்நாடுகளின் கலாச்சாரங்கள் அன்யோன்யமாக ஒன்றோடொன்று பிணைந்திருந்தன. இந்நாடுகளிலிருந்தே ஏனைய நாடுகளின் கலாச்சாரங்கள் வளர்ந்தன.

இந்தியாவின் பண்டைப் பெரும் இலக்கியங்களில் எனக்குச் சிறிது பரிச்சயம் உண்டு. இந்தியாவின் கலைகளைப்பற்றியும் நான் அறிவேன். ஆயினும் அஜந்தாவும் எல்லோராவும் என்னை மெய்சிலிர்க்கச் செய்தன. இத்தாலிய மறுமலர்ச்சிக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்தியக் கலைஞர்களும் சிற்பிகளும், கட்டிட வல்லுநர்களும் மனித உருவையும் மனித உணர்ச்சிகளையும் சித்திரிப்பதில் பிரமாத தேர்ச்சியும் பூரணத்துவமும் பெற்றுவிளங்கினர் என்பது குறிப்பிடத் தக்கது.

இப்பொழுது இந்தியாவிலிருந்து தாய் நாடு திரும்பிவிட்டேன். என்றாலும், இந்திய மக்களின் மாண்பும் மகத்துவமும் எனது சிந்தையிலே சுழன்று சுழன்று வருகின்றன, எல்லா நாட்டவரும் இனத்தவரும் ஒருவரை ஒருவர் நன்கு தெரிந்து கொள்வதும் புரிந்து கொள்வதும் மெத்த அவசியம். இதைப்பற்றிய எண்ண அலைகள் எனது மனத்தில் எழுகின்றன, ஆம்! இதுவே இப்பூவுலகில் நல்லுணர்வும் சாந்தியும் தழைக்க நல்லதொரு பாதை என்பதில் ஐயமில்லை.

ஒரு மனதாய் முழங்கிடுக

'கார்க்கி தாசன்'

மக்களாட்சி என்றிடுவார் தொழில்செய் வோர்கள்
மாடாக உழைத்திடவே வழிகள் செய்வார்!
மிக்கவேதான் அடக்குமுறைச் சட்டம் செய்து
மேலான உரிமைகளைக் கொடுத்தோ மென்பார்!
தக்கவரைப் படுகுழியில் மிதித்துத் தள்ளி
தந்திட்டோம் சமத்துவமே என்றி சைப்பார்!
மிக்ககருப் புடைநீக்ரோ கொளுத்தி விட்டு
மேலான செயலென்பார் அமெரிக் கர்கள்! 1

உண்மையே எங்களுடல் உலகின் அமைதி
உயிராகும் என்றிடுவார் மறுநா ளில்தான்
அண்டங்கொல் அணுகுண்டு நீர்வாய்க் குண்டு
ஆழமான சமுத்திரத்தில் வெடிக்கச் செய்வார்!
'நண்பர்காள்' என்றிடுவார் அயல்நாட் டாரை
நல்லதொகை டாலரையுங் கடனு யீவார்!
சண்டொன்று வந்திட்டால் எங்கள் பக்கம்
சேர்ந்திடுக என்றிடுவர் அமெரிக் கர்கள்! 2

பிறந்திட்ட ஆண்டினிலே சித்தி ரையில்
பேதையர்கள் ஆசியரின் பசிபிக் தன்னில்
கருவழிக்கும் அணுகுண்டு நீர்வாய்க் குண்டு
கணக்கின்றி போட்டிடவே திட்டம் செய்தார்!
மருவில்லா சமாதானக் குழுக்கள் யாவும்
வெறியர்கள் செயல்யாவும் கண்டிக் கத்தான்
ஒருமனதாய் முழங்கிடுக! ஒலகிர்! இன்றேல்
உலகத்தை அழித்திடுவர் அமெரிக் கர்கள். 3

கைதியின் முடிவு

★

துர்கனேவ்

★

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருந்த ஒரு கைதி ஒரு நாள் சிறையிலிருந்து தப்பித்துக்கொண்டான்; தன்னைப் பிடிக்க வருபவர்களைக் கண்டதும் அவன் தலைதெறிக்க ஓட ஆரம்பித்தான்.

முழு மூச்சுடன் அவன் ஓடினான்; அவனைப் பின்தொடர்ந்து வருபவர்களும் மெல்ல மெல்ல அவனை நழுவவிட்டுக்கொண்டிருந்தார்கள்.

ஆனால், அவன் வழியில் ஒரு ஆறு குறுக்கிட்டது. அதன் கரைகள் செங்குத்தாக இருந்தன. குறுகலாக ஆனால் ஆழம் மிகுந்து இருந்தது அந்த ஆறு...அவனுக்கோ நீந்தத் தெரியாது!

மெல்லிய, உளுத்துப்போன பலகை ஒன்று ஆற்றின் குறுக்கே கிடந்தது. அந்தக் கைதி பலகையின்மேல் காலையும் வைத்துவிட்டான்...ஆனால், தற்செயலாக அவனுடைய ஆத்ம நண்பனும், ஜன்ம சத்துருவும் அந்த ஆற்றங்கரையில் நின்றுகொண்டிருந்தார்கள்.

விரோதி ஒன்றும் பேசாமல் கையைக் கட்டிக்கொண்டு நின்றான்; அவனுடைய நண்பனோ உரத்த குரலில் கத்தினான்: "அட கடவுளே! நீ என்னப்பா செய்கிறாய்? பைத்தியக்காரா, யோசித்துப் பார்! அந்தப் பலகை அடியோடு உளுத்துக் கிடப்பது உனக்குத் தெரியவில்லையா? உன்னுடைய கனத்தினால் அது முறிந்துவிடும். நீயும் அழிந்துபோய்விடுவது நிச்சயம்!"

"ஆனால், இதைக் கடப்பதற்கு வேறுவழி எதுவுமே இல்லையே!...பின்தொடர்ந்து வருபவர்களின் சப்தம் உனக்குக் கேட்கவில்லையா?" என்று பலகையில் கால்வைத்து ஏறிக்கொண்டே முனகினான், அந்தத் துரதிருஷ்டக்காரன்,

'நான் உன்னை விடமாட்டேன். நீ அழிந்துபோகும்படி விடவேமாட்டேன்!' என்று கைதியிடம் அபார அன்பு கொண்ட அந்த நண்பன் கத்தினான்; கைதியின் காலடியிலிருந்த அந்தப் பலகையை உடைத்தெறிந்தான். கைதி அந்தக் கணத்திலேயே ஓடும் தண்ணீரில் விழுந்து முழுகிப் போனான்.

விரோதி இதைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே சென்று விட்டான்; ஆனால், அந்த நண்பனோ கரையிலேயே உட்கார்ந்துகொண்டு, தன்னுடைய அப்பாவி நண்பனை நினைத்து அழ ஆரம்பித்தான்.

தன்னுடைய நண்பனின் மரணத்திற்குத் தான்தான் காரணம் என்பது அவனுக்குத் தோன்றவேயில்லை; ஒரு கணம் கூட இந்த எண்ணம் அவனுக்குத் தோன்றவில்லை.

"என் பேச்சை அவன் கேட்கவில்லையே! என் பேச்சை அவன் கேட்கவில்லையே!" என்று வேதனையுடன் முணுமுணுத்தான்.

"எது எப்படியிருந்தாலும், வாழ்க்கை முழுதும் அவன் சிறையில் அடைபட்டு வருந்தியிருப்பான் என்பது வாஸ்தவம். இனி அவனுக்குக் கஷ்டமே கிடையாது. இப்பொழுது அவனுடைய நிலைமை எவ்வளவோ தேவலை! அவனுக்கு இந்த மாதிரியான முடிவு ஏற்பட வேண்டும் என்று அவன் தலை எழுத்துப்போலும்!" என்று தன் மனத்தைச் சமாதானப் படுத்திக்கொண்டான். "இருந்தாலும், நினைத்துப்பார்த்தால், இது வருத்தமாகத்தான் இருக்கிறது."

கோர முடிவை யடைந்த தன் நண்பனை நினைத்து, தேற்றமுடியாதவன்போல அவன் அழத் தொடங்கிவிட்டான்.

ஒரு உன்னத சித்திரம்

◆◆

ஆர். கார்த்திகைவேலு

◆◆

கௌரவத்தாசி! வேடிக்கையான பெயர்! கேட்ட உடனே சிரிப்பு வருகின்றது! இல்லையா? தாசியிலும் கௌரவத்தாசி! ஆனால் இது சிரிக்க வைக்கும் கூத்தல்ல! உலகின் ஒரு பகுதியிலே, சுதந்திரம், ஜனநாயகம் ஆகியவற்றின் உறைவிடம் எனப் பறையடிக்கப்படும் ஒரு நாட்டிலே, மனிதகுலத்தின் ஒரு பகுதியின் அவல நிலையை ஆணித்தரமாக அம்பலப்படுத்தும் கதை இது. தோலின் நிறம் கருப்பாக இருக்கின்ற காரணத்தால், சொல்லொணா இடுக்கண்களுக்கு ஆளாகிவரும் அமெரிக்க நீக்ரோக்களின் வாழ்க்கையின் ஒரு அம்சத்தை எடுத்துரைக்கும் கதை இது! வெள்ளையர் உலகம் எனும் இருள் சூழ்ந்த கானகத்தில் தவிக்கும் நீக்ரோக்களுக்கு அந்த உலகிலேயே நம்பிக்கை தரும் மின்னொளிகளும் உள்ளன என்பதை எடுத்துக்காட்டும் கதை இது;

லிஸ்ஸி! அவள் ஒரு தாசி. ஆனால் வெள்ளையரினத்தைச் சேர்ந்தவள். நியூயார்க்கிலிருந்து அமெரிக்காவின் தென் இராஜ்யம் ஒன்றுக்கு ரெயிலில் போய்க் கொண்டிருந்தாள். அந்த ரெயிலில் அமெரிக்க "ஜனநாயக"ப் பண்புக்கொப்ப கருப்பர்களுக்குத் தனியிடம்! திடீரென அவள் ஒரு குடிகாரனுக்குப் பயந்து வெள்ளையர் இருக்கும் இடத்தை விட்டு நீக்ரோக்கள் பிரயாணம் செய்யும் தனியிடத்திற்கு வந்து விடுகிறாள். குடிகாரன் தொடர்கிறான். அவ்வறையிலிருந்த நீக்ரோக்களில் இருவர் தவிர மற்றையோர் பயத்தில் வெளியேறிவிடுகின்றனர். அக்குடிகாரன் இருவரில் ஒருவரைத் தாக்கிக் கொன்று விடுகிறான். ஆம், கொன்றவன் வெள்ளையன்; அதிலும் செனெட்டர் கிளார்க்கின் மருமகன்; கொல்லப்பட்டவன் கருப்பன். சட்டப்படி 20 ஆண்டு சிறைவாசம் கொலை செய்ததற்காக வெள்ளையனுக்குக் கிடைக்கவேண்டும் ஆனால் ?...

அமெரிக்காவின் சட்டம் அவ்வளவு "அநியாயமாக" அமுலாக்கப்படுவதில்லை. அதுவும்

ஓர் செனெட்டரின் மருமகனுக்கு எதிராகச் சட்டம் நடவடிக்கை எடுக்கலாமா? தவறு. அமெரிக்க ஜனநாயகம் என்ன ஆவது? உலகில் ஜனநாயகத்தையும், சுதந்திரத்தையும் பாதுகாக்கும் பணியிலீடுபட்டுள்ள வெள்ளை அமெரிக்காவின் பிரதிநிதி இவ்விதம் தண்டனைக்கு ஆளாகலாமா? செய்தது குற்றம் தான் ஆனாலும் என்ன? கொல்லப்பட்டவன் ஒரு நீக்ரோதானே? நீக்ரோ இறந்ததால் நஷ்டம் ஒன்றுமில்லையே? ஆனல் ஒரு வெள்ளையன், அதுவும் மதிப்பிற்குரிய செனெட்டரின் மருமகன், அக்குற்றத்திற்காகத் தண்டனை பெறுவதா? தவறு. எனவே நீதியையும், சட்டத்தையும் நிலை நாட்டும் இலாக்கா செனெட்டரின் மருமகனைக் காப்பாற்ற முன்வருகிறது.

லிஸ்ஸியை—ஒரு வெள்ளை மாதை-அந்த இரு நீக்ரோக்கள் கற்பழிக்க முற்பட்டதாகவும். அவளை அவர்களிடமிருந்து காப்பாற்ற,செனெட்டரின் மருமகன், ரட்சகனுக வந்ததாகவும் கூறுமாறு போலீஸ் லிஸ்ஸியைக் கோருகிறது. ஆனல் அந்த லிஸ்ஸி அதற்கு மறுக்கிருள். நீக்ரோக்களை அவளுக்கும் பிடிக்காது. இருந்தாலும் அதற்காக அவள் நீக்ரோக்கள்மீது பொய்க் குற்றம் சாட்டத் தயாராயில்லை. செனெட்டர் கிளார்க்கின் மகன் லிஸ்ஸியை வழிக்குக் கொண்டு வர முயலுகிருன். அவளுக்குப் பணம் தரத்தயார். 500 டாலர்கள் அவன் கொடுக்கத் தயார். ஆனல் அவள் தன் உடலை விற்கத் தயாரேயன்றி, மனச்சாட்சியை விற்கத் தயாராயில்லை.

இறுதியில் செனெட்டர் கிளார்க் அந்தப் பணியை நிறைவேற்றுகிருர். அவரும் தன் மருமகன் செய்தது குற்றம் என்பதை ஏற்றுக் கொள்கிருர். ஆனல் அதற்காக அவன் தண்டிக்கப்படலாமா? 2,000 தொழிலாளர்களைக் கொண்ட தொழிற்சாலையின் அதிபனுன தன் மருமகன் சிறை சென்ருல், அந்த 2,000 தொழிலாளர் கதி என்னுவது? செனெட்டருக்கு அந்தத் தொழிலாளர்கள்மீது அவ்வளவு அக்கறை. அதுமட்டுமா? ஒரு நீக்ரோ போனுல் அதனல் நஷ்டமில்லை. ஆனல் வெள்ளையன் சிறை செல்லலாமா? அவன் குற்றம் புரிந்தது உண்மைதான். ஆனல் உண்மை இருவகைப்படும். நீக்ரோ குற்றமற்றவன் என்பது ஒருவகை உண்மை; ஆனல் இது ஆபாச உண்மை. நீக்ரோ தன்னைத் தாக்கினுன் என்று அமெரிக்க இனத்தின் வெற்றிக்காக லிஸ்ஸி பொய்க் குற்றம் சாட்டுவது மிக உயர்ந்த உண்மை. வாஷிங்டன் உயிருடனிருந்தால் இதைத் தான் கூறியிருப்பார். இவ்விதம் பேசி செனெட்டர், லிஸ்ஸியை ஒப்புக்கொள்ளச் செய்கிருர்.

செனெட்டரின் வாய்ஜாலத்தில் மயங்கி, நீக்ரோமீது பொய் குற்றம் சாட்டும் பத்திரத்தில்

கையொப்பமிட்டாள் லிஸ்ஸி. ஊர்முழுவதும் அவளைப் புகழ்கிறது. பத்திரிகை நிருபர்கள், டெலிவிஷன் பேட்டி, நிரந்தரப் பாடகி வேலை—இவ்விதம் வரிசையாக அவளுக்குக் கைமேல் பலன் கிடைக்கிறது.

ஆனால் லிஸ்ஸியின் மனச்சாட்சி அவளை உறுத்துகிறது. ஊர் முழுவதும் கொல்லப்பட்ட நீக்ரோவின் நண்பனைப் பழி வாங்கத் தேடுகிறது. ஆனால் அவனோ இவர்களிடமிருந்து தப்பித்து, லிஸ்ஸியின் வீட்டிலேயே ஒளிந்துவிடுகிறான். இறுதியில் லிஸ்ஸியும் அவனுடன் சேர்ந்து சிறைக்குச் செல்கிறாள். இதுதான் கௌரவத் தாசியின் கதை.

இப்பொழுது கூறுங்கள்; அவள் தாசியானாலும் கௌரமானவளா, இல்லையா? ஆம், உண்மையில் கௌரவிக்கப்பட வேண்டியவள். அமெரிக்க வெள்ளை மக்களிடமுள்ள நற்பண்பின் பிரதிநிதி அவள். வயிற்றின் காரணத்தால் தன் உடலை விற்றுப் பிழைத்தாலும், மனச்சாட்சியை விற்க மறுக்காத மாது அவள். அமெரிக்காவிலுள்ள இனவெறியை எதிர்த்து நடைபெறும் நீக்ரோக்களின் போராட்டத்திற்கு ஆதரவாகத் திரண்டுவரும் வெள்ளை அமெரிக்கர்களின் பிரதிநிதித்துவச் சின்னம் லிஸ்ஸி. ஆபிரகாம் லிங்கனின் அடிச்சுவட்டைப் பின்பற்றிக் கொஞ்சம், கொஞ்சமாக இனவெறியை எதிர்க்கத் திரண்டுவரும் அமெரிக்கர்களின் பிரதிநிதித்துவச் சின்னம். "ஜனநாயகம்" பேசும் அமெரிக்காவின் உண்மை சொரூபத்தை உலகிற்கு எடுத்துக்காட்டும் உயரிய கதை அவள் கதை.

நிச்சயமாக இந்த அற்புதமான கதையை உருவாக்கியவரைப்பற்றி நாம் ஒருசில வார்த்தைகள் கூறித்தானாகவேண்டும். இக்கதையின் கர்த்தா ஜீன் பால் சார்த்ரே என்பவர். பிரபல பிரெஞ்சு எழுத்தாளர். பிரான்சிலும், ஐரோப்பாவிலும் பலவித சர்ச்சைகளை எழுப்பியுள்ள மாபெரும் சிந்தனையாளர் அவர். அவர் பல கதைகள், நாடகங்கள், கட்டுரைகள் எழுதியுள்ளார். அரசியல், இலக்கிய, சமூகப் பிரச்னைகள் பற்றிப் பல கட்டுரைகள் எழுதியுள்ளார். ஒரு இலக்கியப் பத்திரிகையின் ஆசிரியராக இருக்கிறார் இன்று.

பிரெஞ்சு தேசமானது நாஜி ஆக்கிரமிப்புக்கு உட்பட்டிருந்த காலத்தில், நாஜி எதிர்ப்பு இயக்கத்தில் பங்குகொண்டு பணியாற்றினார். யுத்தம் முடிந்த பின்பு கம்யூனிஸத்திற்கு எதிராக, கம்யூனிஸத்தின்பால் இளைஞர்களுக்குக் கவர்ச்சி ஏற்படுவதைத் தடுக்கக்கூடிய தத்துவத்தைத் தயாரித்துள்ளதாகக் கூறிக்கொண்டார். மேற்கு ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் இவருக்குப் பல சகாக்கள் தோன்றினர். கம்யூனிஸம் வளர்வதைத் தடுக்க இவரது தத்துவமான "எக்ஸிஸ்டன்ஷ்யலிஸம்"

ஓர் அற்புத ஆயுதமென டமாரமடிக்கப்பட்டது. நம் நாட்டில் அமெரிக்கர்களின் தயவில், "கலாச்சார சுதந்திரத்தை"ப் பாதுகாப்பதில் ஈடுபட்டிருந்த "கலாச்சார சுதந்திரக் குழு"வின் பம்பாய் மகாநாட்டிற்கு சில ஆண்டுகளுக்கு முன் அவர் வருவதாகக்கூட பறைசாற்றப் பட்டது, ஆனல், அவர் வரவில்லை.

தனது யுத்தப் பிற்கால கம்யூனிஸ எதிர்ப்புப் போக்கு பிற்போக்குச் சக்திகளைத்தான் பலப்படுத்துகிறது என்பதைப் படிப்படியாக உணர ஆரம்பித்தார் சாத்ரே. ரோஸன்பர்க் தம்பதிகளின் வழக்கு அவருக்கு ஓர் பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியது. கம்யூனிஸ எதிர்ப்பின் கோர சொரூபத்தைப் பற்றி உணர ஆரம்பித்தார். 1953-ம் ஆண்டில் வியன்னுவில் நடைபெற்ற சமாதானப் பேரவையில் முதன் முதலாகப் பங்குகொண்டார். அன்று முதல் அவர் வாழ்வில் ஒரு திரும்புமுனை ஏற்பட்டது. இன்று உலக சமாதான இயக்கத்தின் முன்னணியில் நிற்பவர்களில் ஒருவர் சாத்ரே. கம்யூனிஸ எதிர்ப்பின் விளைவுகளை அம்பலமாக்குவதில் ஈடுபட்டுள்ளார் இன்று. அவருடைய கதைதான் கௌரவத்தாசி.

இக்கதை பிரெஞ்சு நாட்டிலே திரைப்படமாக்கப்பட்டுள்ளது. அந்தப் பிரெஞ்சுப் படம்தான் சென்னை மினர்வா தியேட்டரில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அப்படத்தைப் பார்க்கும் யாரும் சாத்ரேயின் திறமையைப் பற்றிப் புகழாமல் இருக்க முடியாது. அமெரிக்காவில், குறிப்பாக தென் இராஜ்யங்களில், அடிக்கடி நடைபெறக்கூடிய சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட கதை அது. கதையா? இல்லை. வாழ்க்கையின் தத்ரூபக் காட்சி அது. திரையில் படம் ஓடிக்கொண்டிருந்த காலத்தில், எனக்குப் படம் பார்க்கும் உணர்ச்சியிருக்கவில்லை; அச் சம்பவத்தையே நேரில் காண்பது போன்ற உணர்ச்சிதான் ஏற்பட்டது.

கதை அமைப்பு, அதன் வளர்ச்சி ஆகியவை எல்லாம் இயல்பாக இருக்கின்றன. அனுவசியச் சம்பவங்களோ, அர்த்தமற்ற உரையாடல்களோ கிடையாது. பல இடங்களில் நம்மை மயிர்சிலிர்க்கச் செய்யும் முறையில் வசனம் அமைந்துள்ளது. ஆனல் அவை வரட்டுத்தனமாக இல்லை. ஜீவனுள்ளதாக இருக்கின்றன; அமெரிக்க சமுதாயத்தின் சாக்கடைத் தன்மையை மிகச் சிறந்த முறையில் அம்பலப்படுத்துகின்றன.

படம் மிகச் சிறந்தமுறையில் தயாரிக்கப்பட்டுள்ளது. புகைவண்டியில் லிஸ்ஸி பிரயாணம் செய்வதுடன் கதை ஆரம்பமாகிறது. ஆரம்பத்திலேயே, கருப்பர்கள் தனி அறைதான் நமக்குக் காண்பிக்கப்படுகிறது. உடனே நமக்கு தென் ஆப்பி

ரிக்காவும் காந்திஜி "சத்திய சோதனை"யும் ஞாபகத்திற்கு வருகின்றன. நீக்ரோக்களின் உயிர் எவ்வளவு அலட்சியமாகக் கருதப்படுகிறதென்பதை ஆரம்பத்திலேயே அற்புதமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

நடிப்பு மிக நன்ருயிருக்கிறது. எல்லாம் பிரெஞ்சு நடிகர்கள். அவர்கள் கதைக்கு நல்ல உயிர் கொடுத்துள்ளனர். குறிப்பாக லிஸ்ஸியாக நடிக்கும் பெண் அற்புதமாக நடித்திருக்கிருள். செனெட்டர் கிளார்க்கின் மகன் அவளிடம், தான் செனேட்டரின் மகன் என்று பெருமையாகக் கூறி மிரட்டும்பொழுது, தான் மக்கார்த்தியின் மகள் தெரியுமா என்று சொல்லும் கட்டம் அற்புதமாக இருக்கிறது. இறுதியில் கொலை செய்யப்பட்ட நீக்ரோவின் நண்பனை ஊரார் பிடித்துப் போலீஸிடம் ஒப்படைக்கும்பொழுது தானும் அவனுடன் சேர்ந்து செல்லும் காட்சி மனதை விட்டு அகலாது!

"ஜனநாயக" அமெரிக்காவின் யதார்த்தவாழ்வில் காணப்படும் பல்வேறு அம்சங்களை அருமையாகக் கிண்டல் செய்துள்ளார் சாத்ரே இப்படத்தில். உலக ஜனநாயக, சுதந்திர இயக்கத்திற்கு சாத்ரே அளித்துள்ள நல்லதோர் காணிக்கை கௌரவத் தாசி.

காந்தம் கண்ட கனவான்

●

அ. நடராஜன்

●

விஞ்ஞானத் துறையிலே 'பரிசோதனை முறை'க்கு அடிகோலியவர்களில் வில்லியம்கில்பர்ட் (கி. பி. 1544—1603) என்பவருக்கு ஒரு தனிச் சிறப்பிடம் உண்டு. 'காந்தம், மின்சாரம் ஆகியவற்றின் தந்தை கில்பர்ட்' என்று அறிஞர்கள் சொல்லுதல் வழக்கம்.

இங்கிலாந்தில் கால் செஸ்டர் என்னும் இடத்தில் (சுமார் நானூறு ஆண்டுகளுக்கு முன்னர்) கி. பி. 1544 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆம் தேதியன்று கில்பர்ட் பிறந்தார். அவருடைய தகப்பனரிடம் அந்த நகரத்து மக்களுக்கு மிகுந்த மரியாதையும் அன்பும் உண்டு. பதினெட்டாம் வயதில் கேம்பரிட்ஜ் சர்வ கலா சாலையில் சேர்ந்து கணிதம் படித்தார் கில்பர்ட்; அதில் எம். ஏ. பட்டமும் பெற்ருர். ஆனுல், அவர் மனம் வைத்தியத்திலே நாட்டம் கொண்டது. ஊக்கத்துடன் படித்து வைத்தியத்தில் எம். டி. என்ற பட்டம் பெற்ருர். பின்னர் இத்தாலி நாடு சென்று அங்குச் சில காலம் தங்கியிருந்து தனது அறிவை அபிவிருத்தி செய்து கொண்டார். 1573-ல் இங்கிலாந்துக்குத் திரும்பிவந்து அவர் வைத்தியத் தொழிலைத் தொடங்கினர். விரைவிலேயே அவருடைய புகழ் எங்கும் பரவியது. முதல் எலிஸபெத் அரசிக்கு வைத்தியராக அவர் 1601-ல் நியமிக்கப்பட்டார்.

ஓய்வு நேரங்களிலே அவர் ரஸாயனம் பற்றிப் படிப்பது வழக்கம். பின்னர்க் காந்த ஊசி, காந்த ஆற்றல் முதலியவற்றில் அவர் அக்கறை கொண்டார். பல பரிசோதனைகள் செய்து அரிய பல உண்மைகளை அவர் கண்டு பிடித்தார். அறிஞர் பெரு மக்களின் நன்மதிப்பும் அவருக்குக் கிடைந்தது. 1600 ஆம் ஆண்டில் காந்த ஆராய்ச்சிகளைப்பற்றி அரிய நூல் ஒன்றை வெளியிட்டுக் கில்பர்ட் அழியாப் புகழைச் சம்பாதித்துக் கொண்டார். கலிலியோ, ஃப்ரான்ஸிஸ் பேகன் போன்ற விஞ்ஞானிகள் அதைப் பெரிதும் பாராட்டினர்கள். "புதிய பல உண்மைகளை நேரிலேயே பரிசோதனை செய்து

அவற்றை வெளியிட்டிருக்கும் இந்த ஆசிரியரை நான் மிகவும் பாராட்டுகிறேன். தாமாக ஒன்றுமே செய்யாது பிறர் எழுதியிருப்பதையே வேதவாக்காகக் கொண்டு ஆசிரியர்கள் எனப் போலி வேஷம் போடுபவர்கள் இந்த நூலைக் கண்டு வெட்கப்பட வேண்டும்" என்று கலீலியோ சொன்னாராம்!

1603 ஆம் ஆண்டில் எலிஸபெத் ராணி மரணம் அடைந்தாள். அவளுக்குப் பின் வந்த முதலாவது ஜேம்ஸ் மன்னரும் கில்பர்ட்டைத் தனது வைத்தியராக வைத்துக் கொண்டார். ஆனால், ராணியைப் பிரிந்து மற்றொருவருக்குப் பணியாற்றுவதைக் கில்பர்ட் விரும்பவில்லை போலும்! அந்த ஆண்டின் இறுதியிலேயே அவர் இறந்துவிட்டார். கல்யாணம் கூடச் செய்து கொள்ளாது வாழ்நாள் முழுவதையும் விஞ்ஞானத்திற்காகவே அவர் செலவழித்தார்.

காந்த ஆற்றலைப்பற்றிச் சில விவரங்கள் பண்டைக் கால மக்களுக்குக்கூடத் தெரிந்திருந்தன. ஒரு காந்த ஊசியைத் தொங்க விட்டால் அது எப்போதும் ஒரே திசையில் வடக்கு தெற்காக இருக்கிறது என்னும் உண்மை பல நூற்றுண்டுகளுக்கு முன்னரே சீன மக்களுக்குத் தெரிந்திருந்ததாம். கடல் பிரயாணத்தின்போது திசை அறிவதற்கு அத்தகைய ஊசியை அவர்கள் பயன்படுத்தினர்கள். 'காந்தக்கல் இரும்பைத் தன்பால் இழுக்கிறது; அம்பர் என்னும் வஸ்து சிறு காகிதத் துண்டுகளைக் கவர்ந்து கொள்ளுகிறது என்னும் விவரங்கள் சுமார் இரண்டாயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த தேல்ஸ் என்னும் கிரேக்க விஞ்ஞானிக்குக்கூடத் தெரிந்திருந்தனவாம். ஆனல், அந்தப் பொருள்களுக்கு ஒரு தனி 'ஆத்மா' இருக்கிறது என்றும் அதனுல் தான் அவை அம்மாதிரிப் பொருள்களைக் கவர்கின்றன என்றும் அக்காலத்தில் இருந்தவர்கள் நினைத்தார்கள். தவிரவும், 'காந்தக் கல்லைக் கொண்டு வசிய மருந்துகள் செய்யலாம்; உள்ளிப் பூண்டின் மீது தேய்த்தால் காந்தக் கல் தனது காந்தச் சக்தியை இழந்து விடும்; ஆட்டின் ரத்தத்தைப் பூசினல் மறுபடியும் அதற்கு அந்த ஆற்றல் வந்துவிடும்' என்பன போன்ற பல விசித்திரக் கொள்கைகள் மக்களுக்கு இருந்து வந்தன.

பல முறை • பரிசோதனை செய்து அந்தக் கருத்துக்கள் எல்லாம் ஆதாரமற்றவை என்பதைச் சிறிதும் சந்தேகத்துக்கு இடமின்றிக் கில்பர்ட் எடுத்துக் காட்டினர். மேலும் கண்ணடி, கந்தகம், அரக்கு முதலிய பொருள்களையும் பட்டு கம்பளி ஆகியவற்றுல் தேய்த்தால் அவற்றுக்கும் கவர்ச்சி ஆற்றல் ஏற்படுகிறது என்பதையும் அவர் கண்டார்.

காந்த ஊசி ஒன்றைத் தொங்க விட்டால் அது வடக்கு

தெற்காக இருப்பது மட்டும் அன்றிச் சற்றுக் குனிந்தும் சாய்ந்தும் காணப்படுகிறது. அந்தச் சாய்வு பூமியின் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு அளவுள்ளதாக இருக்கிறது. ஆனால், அதற்குக் காரணம் என்ன என்பதை அதுவரை ஒருவரும் எடுத்துச் சொல்லவில்லை. கில்பர்ட்தான் முதன் முதலில் அந்தக் காரணத்தைக் கண்டு பிடித்தார்.

பூமியே ஒரு பெரும் காந்தம் போல் இருப்பது தான் அதற்குக் காரணம் என்று கில்பர்ட் சொன்னார். பூமியைப் போன்ற உருண்டை வடிவம் கொண்ட ஓர் இரும்புக் குண்டைக் காந்தக் கல்லினால் தேய்த்து அதில் காந்தத்தை ஏற்றினார். அதுவும் ஒரு காந்தம் போன்றே இயங்கியது. தவிரவும், தொங்க விடப்பட்ட காந்த ஊசி ஒன்றை அதன் அருகில் கொண்டு வந்தால் பூமியின் பல இடங்களில் எப்படிச் சாய்ந்து நிற்குமோ அப்படியே இருந்ததைக் கண்டார். பூமி மிகப் பெரிய காந்தம்போல் இருக்கிறது என்னும் கருத்தைக் கொண்டு காந்த ஊசியின் சாய்வை விளக்குவது எளிதாயிருந்தது. 'பரிசோதனை'யின் சிறப்பைக் குறித்துக் கில்பர்ட் சொல்லுகிறார். "பொருள்களின் ரகசியங்களை அறிய முற்படுவதில் பிறருடைய கொள்கைகளைவிட நேரிடையாகச் செய்யப்படும் பரிசோதனைகள் உண்மையான ருசுக்களை அளிக்கின்றன........பூமியின் காந்தக் குணத்தை நன்ருகப் புரிந்துகொள்ளும்பொருட்டு காந்தக் கற்கள், எஃகுக் காந்தக் கட்டைகள் முதலியவற்றைப் பற்றி முதலில் சொல்லுகிறேன்...நான் செய்துள்ள பரிசோதனைகளைச் செய்ய விரும்பும் எவனும் கவனமாக இருக்க வேண்டும். சரியாகச் செய்யாது அவற்றை இகழ்ந்து பேசிவிடக் கூடாது; ஏனெனில், நான் சொல்லியிருப்பவை யெல்லாம் பல தடவை பரிசோதிக்கப்பட்ட பின்னரே எழுதப்பட்டவை..."

'பூமி பிரபஞ்சத்தின் மையத்தில் நிலையாக இல்லை; பூமியும் மற்றக் கிரகங்களும் சூரியனைச் சுற்றிவருகின்றன' என்னும் கருத்துக்களை அவர்தான் இங்கிலாந்திலே முதன்முதலாக எடுத்துக்கூறினார். மேலும், நட்சத்திரங்கள் எல்லாம் பூமியிலிருந்து வெவ்வேறு தூரங்களில் இருக்கின்றன என்பதையும் அவர் அறிந்திருந்தார்.

நவீன விஞ்ஞானத்திற்கு வழிகாட்டியாக விளங்கிய அவரை நாம் மறக்கமுடியுமா ?

இந்தியாவில் புகையிலை உற்பத்தி

★

பி. ஐ. பி.

★

நமது நாட்டில் பல பாகங்களில் புகையிலைதான் பிரதான ரொக்கப் பயிராக இருந்துவருகிறது; இந்தத் தொழில் பல லட்சக்கணக்கான மக்களுக்கு ஜீவனோபாயமாக இருந்து வருகிறது. புகையிலை உற்பத்தியில் உலகில் ஐக்ய அமெரிக்கா, சீனுவுக்கு அடுத்து இந்தியா, மூன்ருவது ஸ்தானத்தில் இருந்து வருகிறது. புகையிலைச் சாகுபடி விஸ்தீர்ணம் இந்தியாவின் மொத்த விவசாயச்சாகுபடிப் பிரதேசத்தில் 0·34 சதவிகிதந்தான்; இதன் வருடாந்தர விளைச்சல், நாட்டின் வருடாந்தர விவசாய உற்பத்தியில் சுமார் 0·24 சதவிகிதமாக இருக்கிறது. 1954–55ம் வருடத்தில் இந்தியாவில் சுமார் 8·6 லட்சம் ஏக்கராவில் 5,560 லட்சம் பவுண்டு புகையிலை உற்பத்தி செய்யப்பட்டது.

புகையிலை உற்பத்தியில் முக்கிய ராஜ்யம் ஆந்திரம்; நாட்டில் உற்பத்தி செய்யப்படும் புகையிலையில் 33 சதவிகிதம் இங்கேதான் விளைவிக்கப்படுகிறது; இத்தேசத்தில் சாகுபடி செய்யப்படும் வர்ஜீனியா சிகரெட் புகையிலையில் சுமார் 95 சதவிகிதம் இங்கேதான் பயிரிடப்படுகிறது. உற்பத்தியில் பம்பாய் ராஜ்யம் இரண்டாவதாக நிற்கிறது; இங்கே சுமார் 1460 லட்சம் பவுண்டு புகையிலை உற்பத்தி செய்யப்படுகிறது; இதற்கடுத்தது சென்னை ராஜ்யம்; இங்கே 630 லட்சம் பவுண்டு புகையிலை உற்பத்தி செய்யப்படுகிறது. 1953–54ல் உத்தரப்பிரதேசத்தில் சுமார் 270 லட்சம் பவுண்டும், மேற்கு வங்காளத்தில் சுமார் 250 லட்சம் பவுண்டும் புகையிலை உற்பத்தி செய்யப்பட்டது; புகையிலை சாகுபடி செய்யும் இதர முக்கிய ராஜ்யங்களாவன:—பீஹார், 220 லட்சம் பவுண்டு; ஹைதராபாத், 160 லட்சம் பவுண்டு; அஸ்ஸாம், மைசூர், ஒரிஸ்ஸா, மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், மத்திய பாரத், பஞ்சாப், விந்தியப் பிரதேசம் ஆகிய ராஜ்யங்கள் யாவும் சேர்ந்து மொத்தம் 550 லட்சம் பவுண்டு புகையிலை உற்பத்தி செய்கின்றன.

உள்நாட்டு உபயோகத்துக்

காக உபயோகப்படுத்தப்படும் பல ரகமான கச்சாப் புகையிலை யின் மொத்த அளவு சுமார் 5,500 லட்சம் பவுண்டு இருக்கு மென்று மதிப்பிடப்பட்டிருக் கிறது.

உலகத்தில் புகையிலை ஏற்று மதியில் இந்தியா ஐந்தாவது ஸ்தானம் வகிக்கிறது; இதற்கு முந்திய ஸ்தானங்களை முறையே ஐக்கிய அமெரிக்கா, துருக்கி, கிரீஸ், தென் ரொடீஷியா ஆகிய நாடுகள் வகிக்கின்றன.

இந்தியாவில் உற்பத்தி செய் யப்படும் மொத்தப் புகையிலை யில் சமார் 16 சதவிகிதம் 48க்கு மேற்பட்ட வெளி தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. 1954-55ம் ஆண்டில் ரூ. 1300 லட்சம் மதிப்புள்ள 888 லட்சம் பவுண்டு புகையிலை கடல் மார்க்க மாகவும், ஆகாயமார்க்கமாகவும் ஏற்றுமதி செய்யப்பட்டது. இது தவிர, ரூ. 4 லட்சம் பெறுமானத் துக்குப் புகையிலை தரைமார்க்க மாக ஏற்றுமதி செய்யப்பட்டது. 1954-55ம் வருடத்தில் இந்தி யாவிலிருந்து பிரிட்டன் 370 லட் சம் பவுண்டு புகையிலையையும், சீனு 150 லட்சம் பவுண் டையும் வாங்கின. இந்தி யப் புகையிலை ஏற்றுமதி செய்யப்படும் இதர முக்கிய நாடு கள் ஜப்பான், ஏடன், அதைச் சார்ந்த பிரதேசங்கள், பெல்ஜி யம், இலங்கை, எகிப்து, ஹாங் காங், இந்தோனேஷியா, ஐரிஷ் குடியரசு, நெதர்லாந்து முதலி யனவாகும்.

பிரிட்டிஷ் மார்க்கெட்டில் இந்தியப் புகையிலையுடன் போட்டியிடும் நாடுகள் ஐக்கிய அமெரிக்கா, ரொடிஷியா கானடா ஆகியவைகள். வேறு தேச மார்க்கெட்டுகளிலும் கூட இந்த நாடுகள் இந்தியப் புகை யிலையுடன் போட்டி போடுகின் றன பெரும்பான்மையான தூரக் கிழக்கு நாடுகளிலும் ஐரோப்பிய தேசங்கள் சிலவற்றிலும் இந்தி யாவுடன் புகையிலை வர்த்தகத் தில் போட்டி போடும் முக்கிய நாடு ஐக்கிய அமெரிக்காதான்.

புகையிலைமீது விதிக்கப்படும் எக்சைஸ் வரிமூலம் இந்திய சர்க்காருக்கு வருஷத்துக்கு 3300 லட்சம் ரூபாய் வருமானம் கிடைக்கிறது; இது இந்தியா வில் எக்சைஸ் வரி விதிப்புக்குட் பட்ட எல்லா பொருள்கள்மீதும் வசூலிக்கப்படும் மொத்த வரு மானத்தில் 44 சதவிகிதமாகும். ராஜ்ய சர்க்கார்கள்பலவற்றிற்கு புகையிலை விற்பனை வரி மூலம் கிடைக்கும் வருமானம் முக்கிய மான ரெவினியூ ஆதாரமாக இருந்து வருகிறது. வெளிநாடு களுக்கு ஏற்றுமதி செய்யப்படும் புகையிலைமீது விதிக்கப்படும் விவசாயப் பொருள் தீர்வை மூலம் வருஷத்துக்கு 7 லட் சம் ரூபாய் வசூலிக்கப்படுகிறது; இத்தொகை விவசாய ஆராய்ச்சி திட்டங்களில் செலவழிக்கப்படு கிறது. ○

இந்திய ஆராய்ச்சியாளர்

★

வி. டெஸ்யெடோவ்ஸ்கி

★

இந்தியா சம்பந்தமாக சோவியத் யூனியனில் மேற்கொள்ளப்பட்டுவரும் ஆராய்ச்சிகள் யாவும், பேரவை உறுப்பினர் அலக்ஸிபராணிக்கோவின் பெயருடன் பிணைந்துள்ளன. சோவியத் யூனியனின் தலைசிறந்த விஞ்ஞானிகளில் ஒருவர் இவர். மேலும் இவர் இந்தியா சம்பந்தமான ஆராய்ச்சிகளை மேற்கொண்ட புகழ்வாய்ந்த ருஷ்ய அறிஞர்கள் லெபெசேவ், மினெயேவ், ஓல்டன்பர்க், செட்ச்சர்பட்ஸ்கி, போன்றவர்கள் விட்டுச் சென்ற பணியைத் தொடர்ந்து மேற்கொண்டவரும் ஆவார். 1890-ஆம் ஆண்டு தச்சுத் தொழிலாளியின் குடும்பத்தில் பிறந்த இவர், அரும்பாடுபட்டு கல்வி கற்றார். ஜாரிஸ்ட் ருஷ்யாவில் சாதாரணமாக தொழிலாளி வர்க்கத்தினருக்குக் கிடைக்கமுடியாத பெறும் அதிருஷ்டம் என்றுதான் இதைக் கூற வேண்டும்.

1914-ல் கீவ் பல்கலைக்கழகத்தில் பட்டம்பெற்றுத் தேறினர், பரானிக்கோவ். இப்பல்கலைக் கழகத்தில் சமஸ்கிருதம், ஸொராஸ்டரிய வேத மொழி, ஜெர்மென் மொழி ஆகியவற்றில் இவர் ஆராய்ச்சி நடத்தினர். விஞ்ஞானத்தில் அவர் அடைந்திருந்த பெரும் முன்னேற்றத்தின் காரணமாக, இப்பல்கலைக் கழகத்தில் சிறப்பு உறுப்பினராக்கப்பட்டார். மேலும் துரிதமாகவே அங்கு பேராசிரியர் பதவி பெறுவதற்கும் அவருக்கு வாய்ப்பு இருந்தது. புராதன இந்திய, பாரசீக மொழியியல்களில் இவர் தனது அறிவை மேலும் வளர்த்துக்கொள்ளும் பொருட்டு 1916-ல் பீட்ரோகிராட் பல்கலைக் கழகத்திற்கு அனுப்பப்பட்டார். 1917–ல் சமாரா பல்கலைக் கழகத்தில் "டோசென்ட்"டாக நியமிக்கப்பட்டார். இங்கு இவர் 1919-ல் சமஸ்கிருதமும் ஒப்பியல் மொழி விஞ்ஞானமும் பயிலுவிக்கும் பேராசிரியரானர்.

சமாரா பல்கலைக் கழகத்தில் இளம் பேராசிரியராகப் பணியாற்றத் தொடங்கிய அந்த ஆண்டுகளிலேயே, விஞ்ஞானத் துறையிலும் போதனசிரியர் பணியிலும் அவரது சிறப்பியல்புகள் திட்டவட்டமான உருப் பெற்று விட்டன என்று கூறலாம். அப்பொழுதே அவர் நவீன இந்திய மொழிகளையும்

இலக்கியங்களையும் பயிலுவதற்குத் தன்னை அர்ப்பணித்துக் கொள்வதென்று தீர்மானித்துவிட்டார். இதற்கு முன்பெல்லாம் பிரதானமாக புராதன, மத்திய கால இந்தியாவையும், அதன் மொழிகளையும், (உதாரணமாக சமஸ்கிருதம், பாலி போன்ற மொழிகள்) படித்தறிந்து கொள்வதில்தான் ருஷ்ய விஞ்ஞானிகள் பெரிதும் கவனம் செலுத்திவத்தனர். இத்துறையில் அவர்களுக்கு முக்கிய பலன்கள் ஈந்தன என்பது உண்மையே, ஆயினும் அதேசமயத்தில், நவீன இந்தியாவின் மொழிகளைப் பற்றியும், இலக்கியங்களைப் பற்றியும அவர்கள் சேகரித்திருத்த விஷய ஞானம் அற்பசொற்பமானதாகவே இருந்தது.

காலனி அடிமை ஆட்சிக்கு எதிராகப் போராடிக்கொண்டிருந்த நவீன இந்தியாவின் மொழிகளையும் இலக்கியங்களையும் ஆய்ந்து படித்தறிதல் அவசியமாகும் என்பதை பரானிக்கோ உணர்ந்தார். இது சர்வ சாதாரண காரியமல்ல, மிகவும் விசாலமானதோர் அறிவுத் துறை சம்பந்தமான பணி என்பதையும், இத்துறையில் பணியாற்றுவதற்கு சோவியத் யூனியனைப்போன்ற ஒரு நாட்டில் ஏராளமான விஞ்ஞானிகளும் நிபுணர்களும் இருக்க வேண்டியது அவசியம் என்பதையும் அவர் உணர்ந்தார். எனவே 1921-ல் அவர் லெனின் கிராடு நகருக்குச் சென்று அங்கு வசிக்கத் தொடங்கியது முதற்கொண்டு, நவீன இந்திய மொழிகளைப் போதிக்கும் பணியை மேற்கொண்டார். இங்கு கீழ்நாடுகளைச் சேர்ந்த நவீன மொழிகளைப் பயிலுவிக்கும் லெனின்கிராட் கழகத்தின் இந்தியப் பிரிவுக்கு அவர் தலைவராக நியமிக்கப்பட்டார். 1922-ல் அவர் லெனின்கிராட் அரசாங்கப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக நியமிக்கப்பட்டார்.

நவீன இந்திய மொழிகளைக் கற்பிப்பது,அந்நாட்களில் ருஷ்ய உயர்நிலைப் பள்ளிகளின் பாடத்திட்டத்தில் இடம் பெற்றிருக்கவில்லை. இதனால் இம்மொழிகளில் பாடபுத்தகங்களைத் தயாரிக்க வேண்டிய பணி பராணிக்கோவை எதிர்நோக்கியது. 1926ல் உருது மொழியின் இலக்கணத்தை அவர் சுருக்கமாகத் தொகுத்து வெளியிட்டார். மேலும் உருது மொழியின் நவீன உரை நடைக்கு உதாரணமாகத் திகழும் பல கட்டுரைகள், கதைகளைத் தொகுத்து இரு பாகங்களாக வெளியிட்டார்; இவற்றுடன் உருது – ருஷ்ய – ஆங்கில அகராதி ஒன்றையும் இணைத்திருந்தார் இதல்லாமல், மராத்தி மொழியில் ஒரு பாடப் புத்தகமும், இலக்கணக் குறிப்புகளுடன் இந்தி, உருது மொழிகளில் வசனப் புத்தகம் ஒன்றையும் இந்தி, உருது இம்மொழிகளில் செய்திப் பத்திரிகைகளிலிருந்து தொகுக்கப்பட்ட மற்றொரு வசனப் புத்தகத்கையும் அவர் வெளியிட்டார். வங்காளி

மொழியில் ஒரு பாடபுத்தகம் தயாரிப்பதற்கும் பரானிக்கோ ஒத்துழைத்தார். அவரது வாழ்வின் கடைசி நாட்களில் அவர் தயாரித்த இந்தி மொழிப் பாடப் புத்தகம், இவ்வாண்டு அச்சிட்டு வெளியிடப்பட விருக்கிறது.

பரானிக்கோவ் அவர்கள் போதனாசிரியர் துறையில் பணியாற்றுவதுடன் நின்று விடவில்லை. பேராற்றல்மிக்க விஞ்ஞானியாகவும், பன்மொழிப் புலவராகவும், சரித்திர ஆசிரியராகவும், இலக்கிய அறிஞராகவும் திகழ்ந்த அவர், மத்தியகால புராதன இந்தியாவின் திசை மொழிகளைப் பற்றியும் நவீன இந்தியாவின் மொழிகளைப் பற்றியும், இந்திய மக்களின் வரலாற்றைப் பற்றியும், இந்தியாவின் விஞ்ஞானிகள் மத, அமைப்புகளின் வரலாறு பற்றியும் கிட்டத்தட்ட 200 விஞ்ஞான ஆராய்ச்சி நூல்களை வெளியிட்டார். மேலும் பரானிக்கோவ் இயற்றிய "இந்துஸ்தானி மொழியிலுள்ள தொடர் மொழி வினைச்சொற்களும் அவற்றிற்கு நேரடியான ருஷ்ய வினைச்சொற்களும்' என்ற நூல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு, "இந்தி மொழியிலுள்ள தொடர்மொழி வினைச் சொற்கள் பற்றி" என்ற தலைப்பின் கீழ் காசி நகரில் வெளியிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தோ-ஆரிய மொழிகளின் புராதன வடிவங்களான வேத, சமஸ்கிருத மொழிகளிலிருந்து மொழியியல் சம்பந்தமான மதிப்பிடற்கரிய ஏராளமான தகவல்கள் ஆராய்ச்சியாளனுக்குக் கிடைப்பது போலவே, நவீன இந்தோ-ஆரிய மொழிகளின் ஆராய்ச்சியும் மதிப்பிடற்கரிய பலன்களை அளிக்கவல்லது என்று எ. பரானிக்கோ தனது நூல்கள் பலவற்றில் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

ருஷ்ய சோவியத் சோஷலிஸ்ட் சமஷ்டிக் குடியரசின் ஐரோப்பியப் பகுதியையும், உக்ரைனையும் சேர்ந்த ஜிப்ஸிகள் எனப்படும் நாடோடி மக்களின் சரித்திரபூர்வமான, வர்ண இன பூர்வோத்திரங்களைக் கண்டறிவதற்கும்—அதை விடவும் முக்கியமாக, இந்தியாவிற்கு வெளியே வழங்கி வரும் நவீன இந்திய மொழிகளில் ஒன்றான அம்மக்களின் மொழியை ஆராய்ந்தறிவதற்கும்—பரானிக்கோ விசேஷக் கவனம் செலுத்தினார்.

நவீன இந்திய மொழிகளில் வெளியிடப்பட்ட இலக்கியங்களையும் அவர் மிகுந்த சிரத்தையுடன் அலசி ஆராய்ந்தார். கிருஷ்ண பகவானைப் பற்றிப் பிரபல இந்திய கவிஞர் லாலுஜி லால் இயற்றிய "பிரேம் சாகர்" என்ற புராணக்கதை நூலையும் துளசிதாசுடைய "ராமாயண"த்தையும் முதன்முதலில் ருஷ்ய மொழியில் பெயர்த்த பெருமை பராணிக்கோவைச் சார்ந்ததாகும்.

இவ்விரு மொழி பெயர்ப்புகளும் விரிவான முன்னுரைகளுடன் வெளியிடப்பட்டுள்ளன.

இம் முன்னுரைகளில் இந்தி இலக்கியத்தின் வரலாற்றைப் பற்றிய தகவல்கள் அளிக்கப்பட்டுள்ளன; மேலும், சிறப்பு வாய்ந்த இந்நூல்கள் இந்தி இலக்கிய வரலாற்றில் எத்தகைய ஸ்தானத்தைப் பெற்றுள்ளன என்பதும் அவற்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எ. பராணிக்கோவினல் ருஷ்ய மொழியில் பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்ட "ராமாயண" நூலுடன் நீண்டதொரு முகவுரையும் பிரசுரிக்கப்பட்டது. பராணிக்கோவ் அவர்களாலேயே எழுதப்பெற்ற இம்முகவுரை, சமீபத்தில் இந்தியாவில், இந்தி மொழியில் பெயர்த்துப் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்தி உட்பட நவீன இந்திய மொழிகள் யாவற்றிலும் சிருஷ்டிக்கப்பெற்றுள்ள இலக்கியங்கள் உலக இலக்கியப் பூங்காவின் உயர் சிறப்புவாய்ந்த பகுதியாகத் திகழ்கின்றன என்பதையும், எல்லா நாட்டவரும் ஆய்ந்து படித்து பெரும் பலன் அடையத்தக்கவையாக அவை விளங்குகின்றன என்பதையும் பராணிக்கோவின் மொழிபெயர்ப்புகளும் இலக்கிய விமர்சனங்களும் சுட்டிக்காட்டுகின்றன. மேற்கூறிய இவரது நூல்களும் ருஷ்ய-இந்திய கலாச்சார உறவுகளின் வரலாற்றில் இவர் ஆற்றிய அரும் பணிகளும், இந்திய மக்களுக்கும் சோவியத் மக்களுக்கும் இடையே கலாச்சார இணைக்கமும் ஒத்துழைப்பும் ஏற்படுவதற்குப் பெரிதும் உதவி புரிந்தன.

ருஷ்ய-இந்திய மொழிகளின் அகராதிகளைத் தொகுப்பதற்கு எ. பராணிக்கோவ் செலவிட்ட முயற்சியும் உழைப்பும் உண்மையிலேயே பிரம்மாண்டமானது. தனது மாணுக்கர்களின் உதவியுடன் உருது-ருஷ்ய அகராதி ஒன்றையும் இந்தி-ருஷ்ய அகராதி ஒன்றையும் இவர் தொகுத்தார். இவை முறையே 1951லும் 1953லும் (அவரது மரணத்திற்குப் பிறகு) வெளியிடப்பட்டன. மேற்கூறிய இந்தி-ருஷ்ய அகராதியில் சுமார் 35,000 சொற்களும் சொற்றொடர்களும் அடங்கியுள்ளதுடன், இந்தி மொழியின் சொல் அகராதியில் மிகவும் சமீபகாலத்தில் இடம் பெற்ற புதிய வார்த்தைகளும் சொற்றொடர்களும்கூட அதில் சேர்க்கப்பட்டுள்ளன. இதனல் தான், இப்பொழுது இருந்து வரும் இந்தி-ஆங்கில அகராதிகளையும், இதர பல இருமொழி அகராதிகளையும்விட இந்த அகராதி சிலாக்கியமானதாக தலை சிறந்து விளங்குகிறது

எ. பராணிக்கோ தனது வாழ்வின் இறுதிப் பகுதியில், சோவியத் யூனியன் விஞ்ஞானப் பேரவையின் கீழ்நாடுகள் ஆராய்ச்சிக் கழகத்திற்கு வழிகாட்டினர். அதற்குப் பிறகு சோவியத் யூனியன் பல்வேறு உயர் கல்வி நிலையங்களின் இந்திய மொழிகள் பிரிவுகளுக்குத் தலைவராகப் பணியாற்றினர். புராதன, நவீன இந்திய இலக்கியங்களைப் பற்றியும், இந்திய மொழியியல்பற்றியும், நவீன இந்தோ-ஆரிய

மொழிகளின் ஒப்பியல் இலக்கணம் பற்றியும் அவர் விரிவுரைகள் நிகழ்த்தினர். மேலும், வேதப் புத்தகங்களையும் மத்திய காலத்தைச் சேர்ந்த இந்தி இலக்கியங்களையும் நவீன இந்திய ஆசிரியர்களின் இலக்கியப் படைப்புகளையும் அவர் தனது மாணக்கர்களுக்குப் படித்துக் காட்டி விளக்கினர்; இவ் விலக்கியங்களில் பிரேம் சந்தின் படைப்புகளுக்கு அவர் விசேஷ ஸ்தானம் அளித்தார்.

ஏ. பரானிக்கோவின் நடவடிக்கைகள் யாவும், அவரது பலதிறப் பயிற்சியையும் பேராற்றலையும் அறிவுறுத்துவதாக இருந்தன; சோவியத், இந்திய மக்களுக்கு இடையே கலாச்சார இணக்கமும் ஒத்துழைப்பும் உயர்ந்தோங்குவதற்கும் அவை உதவிபுரிவதாய் இருந்தன. சோவியத் சர்க்காரும் சோவியத் விஞ்ஞானிகளும், இவரது சேவையை பெரிதும் மதித்து அவருக்கு உயர்வான ஸ்தானம் அளித்தனர். சோவியத் யூனியன் விஞ்ஞானப் பேரவைக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்; மேலும் சோவியத் யூனியனின் மிக உயர்ந்த அரசாங்க கவுரவப் பட்டமான லெனின் பதக்கம், 1945ல் அவருக்கு வழங்கப்பட்டது.

இந்தியாவைப்பற்றி புதியதொரு ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த அவர் 1952ல் இயற்கை எய்தினர். இதனல் தடைப்பட்ட அவரது புதிய ஆராய்ச்சிப் பணி, அவருடைய ஏராளமான மாணக்கர்களால் இப்பொழுது பூர்த்திசெய்யப்பட்டு வருகிறது.

★ ருஷ்யக் கதை

அந்தரங்கக் காரியதரிசி

ரிக்ளின்

என் பெயர் உசாசேவ். அநேகமாக நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். நான் ஒரு சைத்ரிகன். என்னுடைய ஓவியங்கள் காட்சிச் சாலைகள் பலவற்றில் இடம் பெற்றிருக்கின்றன. நான் நாணயமானவன், கண்ணியமானவன் என்பது எல்லோருக்கும் தெரியும். வெகு காலமாக நானும் அப்படித்தான் என்னைப் பற்றி நினைத்திருந்தேன். ஆனால், கொஞ்ச காலமாக இதைப்பற்றி எனக்குச் சந்தேகம் தோன்றியிருக்கிறது,

எனக்கு நானே 'நீ ஒரு அயோக்கியனா?' என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதற்குக் காரணம் என்ன? சிலர், தங்கள் செய்கைகளின் மூலம் என்னை வழி தவறி நடக்கத் தூண்டுகிறார்கள். அத்தகையவர்கள் இன்னும் நம் சமூகத்தில் இருக்கிறார்கள்.

சென்ற வருஷம் நடந்த ஒரு சம்பவத்தைச் சொல்லுகிறேன்: என் மகள் அன்னாவுக்கு காதில் நோய் கண்டது. செய்யாத வைத்தியமில்லை. ஆனால் பலன் தான் காணோம். எனக்கு என்ன செய்வது என்று தோன்றவில்லை.

பிரபலமான டாக்டர் ஒருவர் இருந்தார். அவர் காது வைத்தியத்தில் கெட்டிக்காரர். கை ராசிக்காரர். வலது காதைப் பார்த்தே இடது காதில் உள்ள நோயைச் சொல்லிவிடுவார்; அவ்வளவு கெட்டிக்காரர். அவரைப் பார்க்கும்படி நண்பர்கள் எனக்கு யோசனை சொன்னார்கள்.

அந்த டாக்டருக்குப் 'போன்' செய்தேன். பெரிய மனிதர்களுக்குப் 'போன்' செய்தால் அவர்களே 'போனை' எடுத்துப் பேச மாட்டார்கள் போலிருக்கிறது. யாரோ ஒரு பெண் பேசினாள்! ஒருவேளை அவருடைய மனைவியாக இருக்கலாம். இனிய குரலில் பேசினாள்.

"டாக்டரா? அவர் வேலையாக இருக்கிறார். இப்பொழுது பேச முடியாது; கொஞ்ச நேரமாகும்" என்றாள்.

அந்த நேரத்தில், என் நண்பன் ஒருவன் அங்கே வந்தான். நான் அவனிடம் எல்லா விஷயங்களையும் கூறினேன். என்ன செய்வது என்று இருவரும் சேர்ந்து யோசித்தோம். திடீரென்று அவன் எழுந்து டெலிபோனைக் கையிலெடுத்தான்.

"சரி, அந்த 'போன்' நம்பரென்ன; நான் 'போன்' செய்கிறேன். நான் சொன்னுல் அவர் கேட்பார்" என்ருன்.

'உனக்கு அவரைத் தெரியுமா?" என்று கேட்டேன்.

"எனக்கா? ஹாும், அவரை நான் பார்த்ததேயில்லே. இருந்தால் என்ன? முயற்சி செய்து பார்ப்போம்."

நான் அந்த நம்பரைச் சொன்னேன். ஆனல் எனக்கு ஒன்றும் நம்பிக்கையில்லே. நண்பன் பேசியதைக் கவனித்துக்கொண்டிருந்தேன்.

"ஹல்லோ! டாக்டர். இங்கே ஓவியர் உசாசேவின் அந்தரங்கக் காரியதரிசி பேசுகிறேன். டாக்டர் இன்னும் வரவில்லேயே என்று எஜமான் கவலேயாக இருக்கிருர்..."

சற்று நேரம் கழிந்தது. நண்பன் போனைக் கீழே வைத்துவிட்டு, "இன்னும் ஒரு மணி நேரத்தில் டாக்டர் வருவார்" என்ருன்.

"ஏன்?"

"ஏன! வைத்தியம் பார்க்கத்தான்."

"அதெப்படி?"

"இதுபார், கேள்வி எல்லாம் கேட்காதே. எல்லாம் சின்ன விஷயம்தான். அதைச் சொல்லக் கஷ்டமா யிருக்கிறது. சென்ற காலப் பழக்க வழக்கங்கள் இன்னும் சிலரை ஒட்டிக்கொண்டிருக்கின்றன. ஆடம்பரமிருந்தாலொழிய, அவர்கள் எதையும் மதிப்பதில்லே. பட்டம் பதவிகளுக்கு முன்னுல் தலே வணங்குகிருர்கள். நல்ல பெயர் இருக்க வேண்டும் அல்லது பட்டம் இருக்கவேண்டும். இல்லேயென்ருல் புத்தகங்கள் படங்கள் எதையும் அவர்கள் மதிப்பதில்லே. பட்டத்தைக் காட்டிலும் அந்தரங்கக் காரியதரிசிக்கு மதிப்பு அதிகம், அந்தரங்கக் காரியதரிசி இல்லாதவர்கள் அநாமதேயங்கள் போல. ஆனுல் யாராவது ஒருவன், எவனுவது ஒருவனைக் காரியதரிசியாக வைத்துக் கொண்டால் போதும். அவன் பெரிய மனிதன்; இம்மாதிரி அவர்கள் நினைக்கிருர்கள்.

*   *   *

கொஞ்சநாளேக்குப் பிறகு என் துணி மணிகளே எடுத்துக் கொண்டு சலவைச் சாலேக்குப் போனேன். மாஸ்கோ நகரம் முழுவதையும் சுற்றிவிட்டேன். ஆனல், எந்தச் சலவைச் சாலேயும் சீக்கிரம் துணிகளேச் சலவை செய்து தரத் தயாராக இல்லே. என்ன செய்வது? கடைசியில் ஒரு வழி கண்டு பிடித்தேன். ஒரு பெரிய சலவைச் சாலேக்கு டெலிபோன் செய்தேன். அவர்கள் ஏற்கனவேயே சலவை செய்ய மறுத்தவர்கள்.

"ஹல்லோ! சைத்ரிகர் உசாசேவின் காரியதரிசி பேசுகிறேன். எங்கள் எஜமான்..."

நான் பேசி முடிக்கவில்லே, அதற்குள் அவர்கள் இடைமறித்தார்கள்.

"ஆஹா! அதற்கென்ன! உடனே செய்து தருகிருேம்.

உங்களுக்குத் திருப்தியுண்டாகும்படி செய்து தருகிறோம்."

நான் துணிமணிகளை எடுத்துக்கொண்டு அங்கே போனேன். உசாசேவின் அந்தரங்கக் காரியதரிசியாக என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன். அவர்கள் மிகவும் அன்பாகப் பேசினார்கள். உசாசேவின் வாழ்க்கையைப் பற்றியெல்லாம் கேட்டார்கள். என் துணிமணிகளையும் வாங்கிக் கொண்டார்கள்.

என் 'அந்தரங்கக் காரியதரிசி' பலமுறை வெளியே தலைகாட்டத் தொடங்கினான். நான் அவனை வெறுத்தேன். ஆனால் அதே சமயத்தில் அவன்மேல் எனக்குப் பொறாமையும் உண்டாயிற்று.

' நான்—உசாசேவ் என்ற பெயருடைய நான்—சீந்துவாரற்று இருக்கிறேன். ஆனால் என் காரியதரிசி-அதாவது அவனுடைய உருவத்தில் போகும் நான்—வெற்றியடைகிறான். இதற்குக் காரணம் என்ன'' என்று என்னை நானே கேட்டுக் கொண்டேன்.

ஜில்லா நீதிபதி என்னை வரவேற்றார். நாடகத்திற்குப்போக டிக்கட் கிடைத்தது. வீட்டை அலங்காரம் செய்து கொடுக்கும்படியாக, மானேஜரை வற்புறுத்தினேன். தினசரிப் பத்திரிகையும் ஒழுங்காகக் கிடைத்துவந்தது. எல்லாம் என் அந்தரங்கக் காரியதரிசி மூலம்தான். ஆனால் அப்படி ஒரு மனிதன் உயிரோடில்லை!

சட்டவிரோதமான காரியம் எதையும் அவன் செய்வதில்லை. அவனுடைய அந்தஸ்தை நான் பழித்ததில்லை. நியாயமான முறையில் எனக்குச் சேரவேண்டிய எதையும் நான் பெற முடியாவிட்டால் மாத்திரம், அந்த வல்லமை பொருந்திய சக்தியை—அந்தரங்கக் காரியதரிசியை—உபயோகிக்கிறேன்.

உங்கள் நேரத்தை வீணடிப்பதற்காக மன்னிக்கவும்.

என்வீடு, நகரத்தை விட்டுத் தள்ளி, வெகுதூரத்தில் இருக்கிறது. நான் டெலிபோன் செய்வேன்.

"...இன்ன விலாசத்துக்கு ஒரு கார் அனுப்புகிறீர்களா? என்ன! ஒன்றுகூட இல்லையா?"

நான் டெலிபோனைக் கீழே வைப்பேன். ஒரு நிமிஷம் கழித்து, மறுபடியும் அதைக் கையில் எடுப்பேன்.

"சைத்ரிகர் உசாசேவின் அந்தரங்கக் காரியதரிசி பேசுகிறேன். இன்ன விலாசத்துக்கு ஒரு கார் அனுப்புங்கள்."

உடனே, ஆம்—உடனே கால் மணி நேரத்துக்குள், மோட்டார் கார் என்வீட்டு வாசலில் வந்து நிற்கும். இதற்கு என்ன சொல்லுகிறீர்கள்?

என் காரியதரிசி என்னமாதிரியானவன் என்பது இப்பொழுது உங்களுக்குத் தெரிந்திருக்கும்—அவன் நாசமாய் போக!

●

புராதன நகரம்

★

ஆராய்ச்சியாளர்

★

அஹமதாபாத் ஜில்லாவில் (பம்பாய்) சரக்வாலா கிராமத்தில் உள்ள லோதால் மேட்டைத் தோண்டிப் பார்த்தபோது சிந்து சமவெளியின் பிரபல ஹரப்பா நாகரிகச் சின்னங்களைப் போன்ற பல சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. நூற்றுக்கணக்கான முத்திரைகளும் இலச்சினைகளும் அந்த அகழ்வாராய்ச்சியின்போது கிட்டியுள்ளன. அவைகளில் காணப்படுகிற சித்திரங்களும், மிருகங்களும் ஹரப்பா சித்திரங்களை ஞாபகமூட்டக்கூடியபடி இருக்கின்றன.

இந்திய சர்க்கார் புராதனகால ஆராய்ச்சி இலாகாவின் மேற்கு வட்ட நிலையம்தான் இந்த அகழ்வு ஆராய்ச்சி வேலையை நடத்தியது. 4,000 வருஷங்களுக்குமுன் லோதால் நகரம் பிரபல துறைமுக ஸ்தலமாக விளங்கியது என்று அந்த ஆராய்ச்சியிலிருந்து தெரியவந்திருக்கிறது. அந்தத் துறைமுகத்துக்கும் சிந்து சமவெளி நகரங்களுக்கும் வர்த்தகத் தொடர்பு இருந்ததாகவும் தெரியவருகிறது.

"ஸ்டையட்டைட்", "டெரகோட்டா" முத்திரைகளில் யானை, எருது. "ஒற்றைக்கொம்பன்", பறவைகள் முதலியவைகளின் உருவங்கள் காணப்படுகின்றன; அவைகளின் மண் அச்சுப் பிரதிகளும் ஏராளமாய்க் கிடைத்திருக்கின்றன. அந்த முத்திரைகளில் காணப்படுகிற எழுத்துக்கள் சிந்து சமவெளிப் பிரதேச மக்கள் உபயோகித்த எழுத்துக்களைப் போலவே இருக்கின்றன.

அந்த ஸ்தலத்தில் ஒரு பெரிய சூளை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது; அதில் எட்டு அடுக்கு செங்கல் வரிசைகள் இருக்கின்றன. அந்த வரிசைகளுக்கு இடையில் இடுகலான அறைகள் உள்ளன. அவைகளில்தான் அச்சு உருண்டைகள், இலச்சினைகள் முதலியவை சுட்டெடுக்கப்பட்டன வென்று தெரியவருகிறது. சூளைத் தளம் செங்கல் பாவப்பட்டிருக்கிறது. சுவர்களில் மண் பூச்சு இருக்கிறது

ஹரப்பாவிலும், மொகஞ்சோதாரோவிலும் இந்த முத்திரைகள் எப்படிச் சுடப்பட்டன வென்று தெரிய முடியாமலிருந்தது. இங்கே அந்த விவரம் தெரிய வருகிறது. ஈரக்களிமண்

மீது பலவிதமான அச்சுக்களை யும் பதியவைத்து, செங்கல் வரிசைகளின்மீது அவை வைக்கப் பட்டுள்ளன. அவைகளுக்கு மேலே நாணல்களைப் போட்டு மூடப்பட்டிருக்கிறது. சூளை முழுவதும் மண்பூசி மெழுகப்பட்டு விடுவது. சிறிது நேரம் வெந்த பின் முத்திரை அச்சுக்களையும் டெரக்கோட்டா வஸ்துக்களையும் வெளியே எடுத்துவிடலாம். இத்தகைய அச்சுக்கள் கிடைத்துள்ளன.

சூளையின் ஒரு மூலையில் சுமார் 90 டெரக்கோட்டா முத்திரைகள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் சிந்து எழுத்தும், மிருக உருவமும் இருக்கின்றன. இவ்வளவு ஏராளமான அச்சுக்கள் ஒரே இடத்தில் கிடைத்திருப்பதால், லோதால் மிகச் செழிப்புள்ள துறைமுகப்பட்டினமாக இருந்திருக்க வேண்டுமென்று யூகிக்கப்படுகிறது. வியாபாரிகள், பொருள் உற்பத்தியாளர்கள் முதலியோருக்கு அந்த இலச்சினைகள் ஏராளமாகத் தேவைப் பட்டிருக்கின்றன.

பாசிமணிகள், கல் எடை படிகள், செம்புக் கொக்கிகள், ஊசிகள், வளைகள், பாத்திரங்கள் முதலியவைகளும் அங்கே கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. பாசி மணி, தகடு முதலியவை ஏராளமாகத் தயாரிக்கப்பட்டு வந்தன போலும். மண்பாண்டங்களில் சில அரிய வர்ணச் சித்திரவேலைகள் காணப்படுகின்றன.

அந்த ஸ்தலத்தில் மூன்று நாகரிக கட்டங்கள் இருந்ததாகத் தெரியவருகிறது மக்கள் அங்கே முதலில் குடியேறி வசித்தபோது மண்கோட்டை மதில் இல்லை. இடைக்காலக் குடியேற்றத்தின்போது நகரம் கோட்டை கொத்தளங்களுடன் விளங்கியது; அரண்கள் இடிந்த பின் அவைகளுக்குப் பக்கபலமாக மண்செங்கல்களால் தாங்கு சுவர்கள் கட்டப்பட்டிருந்தன. கடைசிக் கட்டத்தில் நகரத்தில் கோட்டை மதில் இல்லை.

சில பகுதிகளில் கட்டடங்களைக் கட்டுவதற்கான மனை இடங்களில் 45 அடி × 45 அடி × 18 அடி மேடை கட்டப்பட்டு அதற்கு மேல் கட்டடங்கள் எழுப்பப்பட்டுள்ளன. அங்குள்ள மக்கள் வெள்ளங்களுக்கு அஞ்சி வாழ்ந்ததாகத் தெரிகிறது.

கட்டுமான வேலைகளில் ஆறு கட்டங்கள் தெரியவந்துள்ளன. அவை ஹரப்பா கட்டட வேலைகளை அனுசரித்த முறையிலேயே இருக்கின்றன. ஆனல் அருகிலுள்ள சபர்மதி, பார்க்கவா– நதிகள்—அவைகளை அடித்துச் சென்றுவிட்டன அன்று தெரிகிறது. ★

'சரஸ்வதி'யில் காணும் கதைகளில் வரும் பெயர்,
சம்பவங்கள் யாவும் கற்பனை.
யாரையும் குறிப்பிடுவன அல்ல.